بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡد

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 9

இதழ் 49

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரீ கமரீ 1446 - ஜமாதிஸ் ஸானீ 02 ★ ஹிஜ்ரீ ஷம்ஸி 1403 - ஃபத்ஹ் 05 ★ 05 டிசம்பர் 2024


## அல்லாஹ்வின் கட்டளை

وَاِذَا رَاَ الَّذِیۡنَ ظَلَمُوا

الۡعَذَابَ فَلَا یُخَفَّفُ

عَنۡہُمۡ وَلَا ہُمۡ یُنۡظَرُوۡنَ۝

**பொருள்**

அநீதியிழைத்தவர்கள் (வாக்களிக்கப்பட்ட) அ(ந்த)த் தண்டனையைக் காணும்போது அவர்களுக்கு அது எளிதாக்கப்படவும் மாட்டாது; அவர்களுக்கு காலக் கெடு அளிக்கப்படவும் மாட்டாது

(அந்நஹ்ல் : 86)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## இறைவனின் புறமிருந்து தோன்றியவர்களை அழித்து விட வேண்டும் என்று எதிரி விரும்புகின்றான். ஆனால் அவர்கள் முன்னேறிக் கொண்டே செல்கின்றனர்

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

அல்லாஹ்வின் நடைமுறை இவ்வாறே தொடர்ந்து வருகின்றது. அதாவது இறைவனை நோக்கி அடியெடுத்து வைக்கின்ற ஒவ்வொரு நபருக்காகவும் சோதனை நிச்சயமாக வைக்கப்பட்டுள்ளது. இறைவன் கூறுகின்றான்:

اَحَسِبَ النَّاسُ اَنۡ یُّتۡرَکُوۡۤا اَنۡ یَّقُوۡلُوۡۤا اٰمَنَّا وَ ہُمۡ لَا یُفۡتَنُوۡنَ

சோதனை செய்வது இறைவனின் பழக்கம் ஆகும். மறைவானவற்றை அறிந்த இறைவனுக்கு அடியாரை சோதித்துப் பார்ப்பதற்கு என்ன தேவை இருக்கின்றது? என்று கருதாதீர்கள். இது தனது புரிதலில் உள்ள தவறாகும். அல்லாஹ் சோதனை செய்வதற்கு தேவையுடையவன் கிடையாது. மனிதன் தான் சுயமே தேவையுடையவனாக இருக்கின்றான். மனிதனுக்கு தனது நிலைமைகளைக் குறித்து தகவல் கிடைப்பதற்காகவும், அவனது ஈமானின் உண்மைத்துவம் வெளிப்படுவதற்காகவும் மனிதனை இறைவன் சோதிக்கின்றான். எதிர்மறையான கருத்தைக் கேட்டு அவர் அதன் தாக்கத்திற்கு ஆளாகிவிட்டான் என்றால் பின்னர் அவனிடம் ஆற்றல் இல்லை என்பதை ஒப்புக் கொள்ள நேரிடுகின்றது. எந்த அளவிற்கு உலகில் எந்த அளவிற்கு கல்வியும், கலைகளும் இருக்கின்றனவோ அவற்றில் பரீட்சையின்றி அவற்றை புரிந்து கொள்ள முடியாது. மனிதன் தனது நிலை எப்படி இருக்கின்றது? என்பதை புரிந்து கொள்வதே இறைவனின் சோதனையாகும். இதன் காரணமாகவே அல்லாஹ்வின் புறமிருந்து தோன்றக் கூடியவர்களுக்கு கண்டிப்பாக எதிரிகள் இருக்கின்றனர். எதிரிகள் அவர்களுக்கு துன்பம் கொடுக்கின்றனர்; பரிகாசம் செய்கின்றனர். அப்படிப்பட்ட நேரத்தில் நற்பேறு பெற்ற மனிதனின் இயல்பானது ஒளியின் கதிர்களால் அவர்களின் உண்மைத்துவத்தை பெற்றுக் கொள்கின்றது. இறைவனால் நடப்பட்ட செடியை பொல்லாதவர்களின் வாய்ப் பேச்சுகளால் அழித்து விட முடியாது. இது ஒன்றே அவர்கள் அவர்களின் இறைவனின் புறமிருந்து தோன்றியதற்கான அடையாளமாகவும், அளவுகோலாகவும் இருக்கின்றது. எதிரி முயற்சி செய்கின்றான்; அவர்கள் அழிந்துபோய் விட வேண்டும் என்று, ஆனால், அவர்கள் அதிகரித்துக் கொண்டும் பெருகிக் கொண்டும் செல்கின்றனர்.(மல்ஃபூஸாத்)

## தற்போது முழு உலகமும் இஸ்லாத்தின் ஏகத்துவத்தை மேற்கொண்டு வருகின்றது

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் சூரா அல்ஹஜ், வசனம் 68-ற்கு விளக்கவுரை வழங்கியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

இந்த வசனத்தில் அல்லாஹ் இந்த முன்னறிவிப்பை செய்திருக்கின்றான். அதாவது, உலகம் எந்த அளவிற்கு எதிர்ப்பு தெரிவித்தாலும் இறுதியில் முஹம்மது (ஸல்) அவர்கள் முன்வைக்கின்ற அதே போதனைதான் உலகில் வெற்றி பெறும். மேலும் அனைத்து மார்க்கங்களின் கொடிகளும் ஒரு நாள் இஸ்லாமியக் கொடிக்கு எதிரில் மறைந்து விடும். ஆக, பாருங்கள்! இறைத் தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் ஏகத்துவ கொள்கையை முன்வைத்தபோது, அந்தக் காலத்தில் உலகத்தின் நிலை எவ்வாறாக இருந்தது? கிறிஸ்தவர்கள் இறைவன் மூவர் என்று கூறக் கூடியவர்களாக இருந்தனர். ஜொராஸ்டியர் ஒளி மற்றும் இருளிற்கு தனித் தனி கடவுள்கள் இருப்பதாக ஏற்றுக் கொண்டிருந்தனர். மஜூஸிகள் நெருப்பை வணங்கக் கூடியவர்களாக இருந்தனர். சிலைகளை வணங்கக் கூடியவர்கள் லாத் மற்றும் மனாத் சிலைகளை தமது கடவுளர்களாக ஒப்புக் கொண்டிருந்தனர். மேலும் இவ்வாறு முழு உலகமும் இணை வைத்தலால் நிரம்பியிருந்தது. ஆனால், இன்று இஸ்லாம் முன்வைத்த அந்த ஏகத்துவம் உலகின் மீது எந்த அளவிற்கு மேலோங்கி விட்டது என்றால், கிறிஸ்தவர்களும் கூட தங்களைத் தாங்களே ஏக இறை வணங்கிகளாக கூறிக் கொள்கின்றனர். மேலும் சிலைகளை வணங்கக் கூடியவர்களும், இதனை ஒப்புக் கொள்கின்றனர். அதாவது இறைவன் ஒருவனே ஆவான்; இந்த சிலை என்பதோ இறை சன்னிதானம் வரை சென்றடைவதற்கான ஒரு ஊடகமே ஆகும் ஆனால், இறைவன் ஒருவனே ஆவான் என்று இஸ்லாம் வாதம் செய்த அந்தக் காலத்தில் அப்போதைய மக்கா வாசிகள், இவர் ஏராளமான கடவுளர்களை ஒரே இறைவனாக ஆக்கி விட்டாரா?; இது மிகவும் விநோதமான விஷயமாகும்; இதனை நாங்கள் ஒருபோதும் கேட்டதில்லை என்று கூறினர். ஆக, ஒருவகையில் அவர்கள் கருதினர்; பல தெய்வங்கள் இருக்கின்றன ; இவரோ எல்லா தெய்வங்களையும் வெட்டி வெட்டி ஒரே இறைவனாக ஆக்கிவிட்டார் என்று அவர்கள் கருதினர். ஆனால், தற்போது முழு உலகமும் இஸ்லாத்தின் ஏகத்துவத்தை ஒப்புக் கொண்டு வருகின்றது. (தஃப்ஸீரே கபீர், தொகுதி 6, பக்கம் 87, காதியான் பதிப்பு)

## நபிமொழி

ஹஸ்ரத் ஸுஹைப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

நம்பிக்கையாளரின் விவகாரமோ விநோதமானதாகும். அவரது விவகாரம் முற்றிலும் நன்மையானதாகும். இது நம்பிக்கையாளரை தவிர்த்து வேறு எவருக்கும் கிடையாது. அவருக்கு ஏதாவது மகிழ்ச்சி ஏற்படுகின்றது என்றால் அவரோ நன்றி செலுத்துகின்றார். மேலும் இது அவருக்கு நன்மையாக அமைகின்றது. மேலும் அவருக்கு ஏதாவது துன்பம் ஏற்படுகின்றது என்றால், பின்னர் அவர் பொறுமை செய்கின்றார். இதுவும் அவருக்கு நன்மையாக அமைகின்றது.

(முஸ்லிம் கிதாபுஸ் ஸுஹ்த் வர் ரகாயிக்)

ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறிவந்தார்கள்: எந்த இறைவனின் கரத்தில் எனது உயிர் உள்ளதோ அவன் மீது ஆணையாக! நான் உங்களின் தந்தை மற்றும் பிள்ளைகளைக் காட்டிலும் அதிக நேசத்திற்குரியவனாக ஆகிவிடாத வரை உங்களில் எவரும் நம்பிக்கையாளராக முடியாது. (புஹாரீ, கிதாபுல் ஈமான்)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

நீங்கள் சொர்க்கத்தின் தோட்டங்களை கடந்து செல்லும்போது அதிகமாக மேய்ந்து கொள்ளுங்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! ரியாழுல் ஜன்னா என்பதன் பொருள் என்ன? என்று ஸஹாபிகள் கேட்டனர். அதற்கு, அறிவார்ந்த சபைகள் என்று அன்னார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அத்தர்கீப் வத் தர்ஹீப் லில் முன்ஸரீ, கிதாபுல் இல்ம்)

* * * * * * * *


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**பனூ குறைழா போர் முடிவுற்றபோது பனூ குறைழாவிற்கு வழங்கப்பட்ட தண்டனைக் குறித்து ஸீரத் காத்தமுன் நபிய்யீன் (ஸல்) சான்றுகளின் ஒளியில் சுருக்கமான ஆய்வு**

பனூ குறைழாவின் குற்றத்திற்காக வழங்கப்பட்ட தீர்ப்பு தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஒருபோதும் ஆட்சேபனை செய்ய முடியாது. மாறாக, இந்த சம்பவம் அன்னாருடைய உயர் நல்லொழுக்கம் மற்றும் சிறந்த நிர்வாகம் மற்றும் அன்னாரின் இயல்பான கருணை மற்றும் பரிவு ஆகியவற்றிற்கான ஒரு தெளிவான சான்றாகும்

அசல் தீர்ப்பை பற்றிய கேள்வி எஞ்சியிருக்கின்றது. எனவே அது தொடர்பாகவும் நம்மால் தயக்கமின்றி கூற முடியும். அதாவது, அதில் ஒருபோதும் எவ்வகையிலும் அநீதி மற்றும் அக்கிரமத்திற்கான பங்கு இருக்கவில்லை. மாறாக, அது முற்றிலும் நீதி மற்றும் நேர்மையை அடிப்படையாக கொண்டிருந்தது.

அதற்கு எல்லாவற்றையும் விட முதலில் இதனை நாம் பார்க்க வேண்டும். அதாவது பனூ குறைழாவின் குற்றம் என்னவாக இருந்தது? மேலும் அந்தக் குற்றம் எப்படிப்பட்ட சூழ்நிலையில் செய்யப்பட்டது? என்று பார்க்க வேண்டும்

பனூ நழீர் கோத்திரத்தின் கொலை வெறித் திட்டங்களைக் குறித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தெரிய வந்தபோது, அன்னார் (ஸல்), அவர்களை எச்சரிக்கை செய்யக் கூடிய மற்றும் தண்டனை கொடுப்பதற்கான வழிமுறையை மேற்கொண்டார்கள். அப்போது, அவர்கள் மிகவும் ஆணவம் மிக்க வடிவில் முஸ்லிம்களுடன் போர் புரிவதற்கு தயாராகி விட்டனர். மேலும் இந்தப் போரில் பனூ குறைழா அவர்களுக்கு உதவி செய்தது

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**

(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 01 நவம்பர் 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1403 ஆண்டு **நுபுவ்வத்** மாதம் **1 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِينَ ○ الرَّحْمٰنِ الرَّحِيمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّينِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ ○
صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ ○

பனூ குறைழா போரின் விளக்கம் எடுத்துரைக்கப்பட்டுக் கொண்டிருந்தது. கூடுதல் விளக்கம் இவ்வாறாகும். அதாவது அதில் ஷஹீதான முஸ்லிம்களைக் குறித்து இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. அதாவது அந்தப் போரில் இரண்டு முஸ்லிம்கள் ஷஹீதானார்கள். கல்லாத் பின் ஸுவைத் (ரலி) மற்றும் ஹஸ்ரத் முன்ஸிர் பின் முஹம்மத் (ரலி) ஆகியோர் ஆவர். மேலும் யூதர்களில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கைக் குறித்து இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. அதாவது பனூ குறைழாப் போரில் கொலையுண்ட யூதர்களின் எண்ணிக்கையில் கருத்து வேறுபாடு காணப்படுகின்றது.

இப்னு இஸ்ஹாக் இவ்வாறு எழுதியுள்ளார்கள்: அதாவது அவர்களின் எண்ணிக்கை 600 ஆக இருந்தது. ஓர் அறிவிப்பின் அடிப்படையில் அவர்களின் எண்ணிக்கை 700 ஆக இருந்தது. ஸுஹைலீ கூறுகின்றார்கள்: அவர்களின் எண்ணிக்கை 800 ஆக இருந்தது. இமாம் திர்மிதி அவர்களும், இமாம் நஸாயீ அவர்களும் 400 போர் வீரர்கள் கொலையுண்டனர் என்று எழுதியுள்ளனர். இப்னு ஸஅத் அவர்களும் 600-லிருந்து 700 க்கு இடைப்பட்ட எண்ணிக்கையை எடுத்துரைத்துள்ளார்கள். (ஸுபுலுல் ஹுதா வர் ரஷ்ஷாத் தொகுதி 5, பக்கம் 16, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 1993)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் தமது பல்வேறு வரலாற்று ஆய்வுகளை செய்துள்ளார்கள். அதற்கேற்ப, அன்னார் (ரலி) எழுதுகின்றார்கள்: ஏறக்குறைய 400 நபர்கள் என்று எழுதியுள்ளார்கள். அந்த நாளில் ஸஅது (ரலி) அவர்களின் தீர்ப்பிற்கு ஏற்ப கொலை செய்யப்பட்டார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸஹாபிகளுக்கு கட்டளை வழங்கி அந்த கொலையுண்டவர்களை தமது ஏற்பாட்டின் கீழ் அடக்கம் செய்ய வைத்தார்கள். (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களின் நூல் - ஸீரத் காத்தமுன் நபிய்யீன், பக்கம் 603)

இஸ்லாத்தின் எதிரிகள் எண்ணிக்கையை மிகைப்படுத்தி எடுத்துரைத்து, பின்னர் இஸ்லாத்தை அக்கிரமமான மார்க்கமாக எடுத்துரைத்துள்ளனர். இதற்கான முயற்சி செய்கின்றனர். ஆனால், உண்மையையும், சாட்சியங்களையும் பார்க்கும் போது, ஆதாரப்பூர்வமான வரலாற்றின் அடிப்படையில் (கொலையுண்டவர்களின்) எண்ணிக்கை சுமார் 400 ஐ எட்டுகின்றது. அதுவும் கூட அது போர் வீரர்களின் எண்ணிக்கையாக இருக்கின்றது.

இக்காலத்தின் ஓர் அறிஞர் ஸய்யது பரகாத் ஸாஹிப் என்பவரும் இதில் பெரும் ஆராய்ச்சி செய்திருக்கின்றார். மேலும் அவர் மிகவும் நன்றாக எழுதியிருக்கின்றார். ரஸுலே அக்ரம் மற்றும் யஹுதே ஹிஜாஸ் என்ற தனது நூலில் இவ்வாறு எழுதுகின்றார்: அதாவது, பனூ குறைழாவைச் சேர்ந்தவர்களில் கொலையுண்டவர்களின் எண்ணிக்கைக் குறித்த விவாவத்தைப் பாருங்கள் என்று அவர் கூறுகின்றார். பின்னர் அவர் சில கேள்விகளை எழுப்பியுள்ளார். அவற்றில் சில கேள்விகள் ஓரளவிற்கு தர்க்க ரீதியிலான அம்சத்தைக் கொண்டுள்ளன. அவர் அதே அடிப்படையான விதிமுறையையே எடுத்திருக்கின்றார். அவர் எடுத்துள்ளது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அதாவது, ஹதீஸாக இருக்கட்டும் அல்லது வரலாறாக இருக்கட்டும். அவற்றின் அறிவிப்புகள் பலவீனமானவையாகவும், நம்பகத்தன்மை அற்றவையாகவும் இருப்பதற்கு வாய்ப்பு இருக்கின்றது. எனவே கண்களை மூடிக் கொண்டு எல்லா அறிவிப்புகளையும் ஏற்றுக் கொண்டு சென்று விடுவது ஒன்றும் புத்திசாலித்தனம் கிடையாது. பின்னர் 600-லிருந்து 900 வரை கொலையுண்ட ஆண்கள் இருக்கின்றனர். அவர்களின் பெண்களும், குழந்தைகளும் இருந்தனர். அவர்களின் எண்ணிக்கை சரியான அனுமானத்திற்கு ஏற்ப ஐந்தாயிரம், ஆறாயிரத்தை விடக் குறைவானது கிடையாது. அவர்களைக் குறித்து, மதீனாவில் அவர்கள் கயிறுகளால் கட்டப்பட்டுக் கொண்டு வரப்பட்டார்கள் என்று கூறுவது, மேலும் இரண்டு வீடுகளில் வைக்கப்பட்டார்கள் மேலும், அவர்களின் உணவுக்கான ஏற்பாடு இருக்கின்றது. அதேநேரம் முஸ்லிம்கள் சுயமே பசித்தவர்களாக இருந்தனர். இயற்கைத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக இவ்வளவு பெரிய எண்ணிக்கையில் அவர்களை கொண்டு செல்வது ; இன்னும் பல தேவைகள் இருக்கின்றன. எவருமே தப்பித்துச் செல்வதற்கு முயற்சி செய்யாமல் இருப்பது, எந்தக் கூச்சல் குழப்பமும் இல்லாமல் இருப்பது; மேலும் இரவோடு இரவாக மதீனாவின் ஒரு தெருவில் இந்த 600 நபர்களை கொலை செய்வதற்காக குழி தோண்டச் செய்வது போன்ற விஷயங்கள் இருக்கின்றன. ஏற்கனவே புதிதாக தோண்டப்பட்ட அகழ்களும் இருந்தன. அதன் பின்னரும் இரண்டு அல்லது மூன்று நபர்கள் அதாவது ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களும், ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) ஆகிய இவ்விருவருமே அவர்கள் அனைவரையும் கொலை செய்வது ; மேலும் இந்த இரு ஸஹாபிகள் ஒருபோதும் இந்த சம்பவத்தை குறிப்பிடாமல் இருப்பது; மேலும், புகாரீயில் கொலை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கையை குறிப்பிடப்படாமல் இருப்பது; இதே போன்று இன்னும் வேறு சில விஷயங்கள் நமக்கு இதன் பக்கம் வழிகாட்டுகின்றன .அதாவது, இந்த

அறிவிப்புகளை முற்றாக சீர்தூக்கிப் பார்க்க வேண்டும் ; மேலும், இந்த அறிவிப்புகளில் எங்கேயாவது மிகைப்படுத்துதல் கை கொள்ளப்பட்டிருக்கின்றதா? என்றும் பார்க்க வேண்டும்.

(நூலாசிரியர்) எழுதுகின்றார்: திரைக்குப் பின்னால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் முஸ்லிம்கள் மீதான யூதப் பகைமையை ஊதிப் பெரிதாக்குவதற்காக இந்த சம்பவங்களில் பிற்காலத்து மக்கள் தங்களது கருத்துகளை சேர்த்து விட்டனர். ஏனெனில், புஹாரீயில் பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தை என்பது இதுவாகும். அதாவது, ஹஸ்ரத் ஸஅத் (ரலி) அவர்கள் தீர்ப்பில்

تُقْتَلُ الْمُقَاتِلَه

என்று கூறியிருந்தார்கள். பொருள்: அவர்களில் போர் செய்யக் கூடியவர்களை கொலை செய்து விடுங்கள்.

தற்போது, பொதுவான வரலாற்றாசிரியர்களும், வாழ்க்கை வரலாற்றாசிரியர்களும் இதற்கு இவ்வாறு மொழியாக்கம் செய்துள்ளனர். அதாவது, போர் புரிவதற்கு தகுதிபடைத்த ஒவ்வொரு ஆணும் கொலை செய்யப்பட வேண்டும். இன்னும் கூறப்போனால், அவர்கள் இந்த சொல்லிற்கு இந்த அளவிற்கு விளக்கம் கொடுத்துள்ளார்கள். அதாவது, போர் புரிவதற்கு தகுதி படைத்த ஆண்கள் என்பதன் பொருள் பருவமடைந்த ஆண் ஆவார். மேலும் பருவமடைதலுக்கான கால நிர்ணயம் என்பதையும் சுயமே அவர்கள் நிர்ணயித்துள்ளார்கள். அதாவது, சில நபர்களை நிறுத்தினார்கள். அவர்கள் ஆண்கள் பருவமடைவதற்கான அடையாளத்தை முறையாக பரிசோதித்து வந்தனர். மேலும், இவர் பருவமடைந்தவர் என்று அறிவிப்பு செய்தனர். மேலும் இவ்வாறு இந்த எண்ணிக்கை அதிகரித்து விட்டது. இந்த அளவிற்கு இதில் மிகைப்படுத்துதல் இருக்கின்றது. ஆனால், இதில் அவர்கள் முகாதிலாஃ என்பதற்கான மொழியாக்கத்தை அவர்கள் குறுகிய அளவில் செய்திருக்கின்றார்கள். மேலும், அந்தப் போரில் பங்கு பெறக் கூடிய ஆண்கள் மட்டுமே ஆவர் என்ற அளவில் அதற்கு பொருள் கொடுத்துள்ளனர். அவர்களின் ஆய்வின் அடிப்படையில் 20-க்கும் கூடுதலாகும். இதனை இவர் இன்னும் அதிகமாக குறைத்து விட்டார். இது ஓரளவிற்கு தர்க்க ரீதியிலான அம்சத்தைக் கொண்டுள்ளது.

(ரஸூலே அக்ரம் மற்றும் யஹூதே ஹிஜாஸ் என்ற நூல், பக்கம் 132 -148, உருது மொழியாக்கம், நூலாசிரியர் ஸய்யது பரகாத் அஹ்மத், மொழிபெயர்ப்பாளர் மஷீருல் ஹக், ஜாமிஆ புது டெல்லி நூலகம்)

எவ்வாறு இருப்பினும், இது அவருடைய ஆய்வாகும். ஆயினும் அவருடய சில விஷயங்கள் அறிவார்ந்தவையாகும். மேலும் ஆய்வில் அவற்றை அடிப்படையாக எடுத்துக் கொள்ள முடியும்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் எம்.ஏ (ரலி) அவர்கள் பனூ குறைழா போரில் கொலையுண்ட யூதர்களின் எண்ணிக்கைக் குறித்து முஸ்லிம் அல்லாதோர் செய்யக் கூடிய ஆட்சேபனைகளுக்கு வழங்கிய பதிலில் கூறுகின்றார்கள்:

பனூ குறைழாவின் சம்பவம் தொடர்பாக முஸ்லிம் அல்லாத சில வரலாற்றாசிரியர்கள் மிகவும் விரும்பத்தகாத வழிமுறையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எதிராக தாக்குதல் நடத்தியுள்ளனர். மேலும் ஏறக்குறைய 400 யூதர்களுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டதன் காரணமாக அன்னாரை நவூதுபில்லாஹ் அநீதியாளர் என்றும் கொடுங்கோலர் என்ற வடிவிலும் முன்நிறுத்தியுள்ளனர். இந்த ஆட்சேபனை மார்க்க காழ்ப்புணர்ச்சியை அடித்தளமாகக் கொண்டுள்ளது. இஸ்லாம் மற்றும் இஸ்லாத்தின் தோற்றுனர் தொடர்பாக செய்யப்படும் இந்த ஆட்சேபனையிலிருந்து ஏராளமான மேற்கத்திய சிந்தனையின் ஒளியில் தர்பிய்யத் பெற்ற வரலாற்றாசிரியர்களும் கூட விலகியிருக்கவில்லை. சில முஸ்லிம்களும் கூட அவர்களின் தாக்கத்தின் கீழ் வந்து விட்டனர்.

இந்த ஆட்சேபனைக்கு வழங்கிய பதிலில் அன்னார் (ரலி) எழுதுகின்றார்கள்: முதல் விஷயம், இதனை நினைவிற் கொள்ள வேண்டும். அதாவது, பனூ குறைழாவைப் பொருத்த வரை எந்தத் தீர்ப்பு அநீதியானதாகக் கூறப்படுகின்றதோ, அது ஸஅது பின் முஆஸ் (ரலி) அவர்களின் தீர்ப்பாக இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய தீர்ப்பாக அது ஒருபோதும் இருக்கவில்லை. மேலும், அது அன்னாருடைய தீர்ப்பாகவே இல்லாதபோது, அதன் காரணமாக அன்னார் (ஸல்) மீது ஆட்சேபனை செய்ய முடியாது. இரண்டாவது, இந்தத் தீர்ப்பானது முஸ்லிம்கள் எதிர்கொண்ட சூழ்நிலையின் அடிப்படையின் கீழ் ஒருபோதும் தவறானதாகவும், அநீதியானதாகவும் இருக்கவில்லை. .......... அப்போது நிலவிய சூழ்நிலைகள் முன்னர் எடுத்துரைக்கப்பட்டு விட்டன. எனவே அந்தத் தீர்ப்பு அநீதியானதாக இருக்கவில்லை. மூன்றாவது, ஸஅது (ரலி) அவர்கள் தீர்ப்பை அறிவிப்பதற்கு முன்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்ட உறுதிமொழியின் அடிப்படையில் அன்னார் (ஸல்) எல்லாநிலையிலும் அதற்கேற்ப செயல்படுவதற்கு கட்டுப்பட வேண்டியவர்களாக இருந்தார்கள். நான்கு, குற்றவாளிகள் சுயமே அந்தத் தீர்ப்பை ஏற்றுக் கொண்டு விட்டபோது, அதன் மீது ஆட்சேபனை செய்யாத போது, மேலும் அதனை ஓர் இறை நியதியாக புரிந்து கொண்டு விட்டபோது உதாரணமாக ஹுயைய் பின் அக்தபுடைய சொற்களிலிருந்தும் வெளிப்படுகின்றது. அதனை அவன் கொலை செய்யப்படும் நேரத்தில் கூறினான். எனவே இந்த நிலையிலும், தேவையின்றி அதில் தலையீடு செய்வதற்காக எழுந்து நின்று விடுவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பணியாக இருக்கவில்லை.

ஸஅது (ரலி) அவர்களின் தீர்ப்பிற்குப் பிறகு இந்த விவகாரத்துடன் அன்னாருக்கு இந்த அளவில்தான் தொடர்பு இருந்தது. அதாவது, அன்னார் (ஸல்) தமது அரசாங்க ஏற்பாட்டின் கீழ் அந்தத் தீர்ப்பை அழகிய முறையில் செயல்படுத்தும் அளவில் மட்டுமே இருந்தது. மேலும், அன்னார் (ஸல்) அதனை எப்படிப்பட்ட வடிவில் செயல்படுத்தினார்கள் என்றால், அது கருணை மற்றும் பரிவின் சிறந்த முன்மாதிரியாக புரிந்து கொள்ள முடியும்.




அதாவது, இந்த மக்கள் தீர்ப்பு செயல்படுத்தப்படுவதற்கு முன்னர் கைதிகளாக இருந்த வரை அன்னார் (ஸல்) அவர்களுடைய இருப்பிடம் மற்றும் உணவிற்கான சிறந்த ஏற்பாட்டை செய்தார்கள். மேலும் அவர்களுக்கு எதிராக தீர்ப்பு வழங்கப்பட்டபோது, அன்னார் (ஸல்) அதனை எவ்வளவு அழகிய முறையில் நடைமுறைப்படுத்தினார்கள் என்றால் குற்றவாளிகளுக்கு மிகக் மிகக் குறைவான துன்பத்திற்கு காரணியாக இருந்தது. அதாவது, முதலாவதாக, அவர்களின் உணர்வுகளை கருத்தில் கொண்டவாறு அன்னார் (ஸல்) இந்தக் கட்டளையை வழங்கினார்கள். அதாவது ஒரு குற்றவாளி கொலை செய்யப்படும் நேரத்தில் வேறு எந்தவொரு குற்றவாளியும் முன்னால் இல்லாதபடி பார்த்துக் கொள்ளுங்கள். இன்னும் கூறப்போனால், வரலாற்றிலிருந்து இதுவும் தெரிய வருகின்றது. அதாவது, எந்த மக்கள் கொலை செய்யப்படும் இடத்திற்கு கொண்டு வரப்பட்டார்களோ அவர்கள் கொலை செய்யப்படும் இடத்தை அடையும் வரை தாங்கள் எங்கு கொண்டு செல்லப்படுகின்றோம்? என்பது தெரியாமல் இருந்தது. இது மட்டுமின்றி, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு முன்னால் எந்தவொரு நபர் தொடர்பாக கருணைக்கான முறையீடு முன்வைக்கப்பட்டதோ அதனை அன்னார் (ஸல்) உடனடியாக ஏற்றுக் கொண்டு விட்டார்கள். அப்படிப்பட்ட மக்களின் உயிர் மட்டும் பாதுகாக்கப்படவில்லை. மாறாக அவர்களின் மனைவி, பிள்ளைகள் மற்றும் செல்வங்கள் தொடர்பாகவும் இவ்வாறு கட்டளை வழங்கினார்கள்: அதாவது அவற்றை திருப்பிக் கொடுத்து விடுங்கள் என்று கட்டளையிட்டார்கள். குற்றவாளிகளுடன் கருணை மற்றும் பரிவுக்கான நடைமுறை இதனை விட அதிகமாக வேறு என்ன இருக்க முடியும்? எனவே பனூ குறைழாவின் சம்பவம் தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஒருபோதும் ஆட்சேபனை செய்ய முடியாது. மாறாக, இந்த சம்பவம் அன்னாருடைய உயர் நல்லொழுக்கம் மற்றும் சிறந்த நிர்வாகம் மற்றும் அன்னாரின் இயல்பான கருணை மற்றும் பரிவு ஆகியவற்றிற்கான ஒரு தெளிவான சான்றாகும்.

இப்போது அசல் தீர்ப்பை பற்றிய கேள்வி எஞ்சியிருக்கின்றது. எனவே அது தொடர்பாகவும் நம்மால் தயக்கமின்றி கூற முடியும். அதாவது, அதில் ஒருபோதும் எவ்வகையிலும் அநீதி மற்றும் அக்கிரமத்திற்கான பங்கு இருக்கவில்லை. மாறாக, அது முற்றிலும் நீதி மற்றும் நேர்மையை அடிப்படையாக கொண்டிருந்தது.

அதற்கு எல்லாவற்றையும் விட முதலில் இதனை நாம் பார்க்க வேண்டும். அதாவது பனூ குறைழாவின் குற்றம் என்னவாக இருந்தது? மேலும் அந்தக் குற்றம் எப்படிப்பட்ட சூழ்நிலையில் செய்யப்பட்டது? என்று பார்க்க வேண்டும். எனவே வரலாற்றிலிருந்து இது தெரிய வருகின்றது. அதாவது, துவக்கத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனா வருகை தந்தபோது அக்காலத்தில் மதீனாவில் யூதர்களின் மூன்று கோத்திரங்கள் வசித்து வந்தன. அதாவது பனூ கைனுக்காஃ கோத்திரம், பனூ நழீர் கோத்திரம் மற்றும்

பனூ குறைழா கோத்திரம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத்திற்குப் பிறகு முதல் அரசியல் நடவடிக்கையாக இதனை மேற்கொண்டார்கள். அதாவது, இந்த மூன்று கோத்திரங்களின் தலைவர்களையும் அழைத்து அவர்களுடன் அமைதி மற்றும் பாதுகாப்பிற்கான ஓர் ஒப்பந்தத்தை செய்தார்கள். அந்த ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் இவ்வாறாக இருந்தன. அதாவது, முஸ்லிம்கள் மற்றும் யூதர்கள் அமைதியுடனும், பாதுகாப்புடனும் மதீனாவில் வசிப்பார்கள். மேலும், ஒருவர் மற்றவருடன் நட்பு ரீதியிலான தொடர்பு கொண்டிருப்பார்கள். மேலும் ஒருவர் மற்றவருடைய எதிரிகளுக்கு எவ்வகையான உதவியும் செய்ய மாட்டார்கள். மேலும், ஒருவர் மற்றவருடைய எதிரிகளுடன் எவ்வகையான தொடர்பும் கொள்ள மாட்டார்கள். ஒருவேளை வெளிப்புற கோத்திரம் அல்லது கோத்திரங்களின் தரப்பிலிருந்து மதீனாவின் மீது ஏதாவது தாக்குதல் நடத்தப்பட்டால் பின்னர் அனைவரும் இணைந்து அதனை எதிர்கொள்ள வேண்டும். மேலும், ஒருவேளை உடன்படிக்கை செய்யக் கூடியவர்களில் ஒரு நபரோ அல்லது ஒரு கூட்டமோ இந்த ஒப்பந்தத்தை முறித்தால் அல்லது குழப்பம் விளைவிப்பதற்கு காரணமாக திகழ்ந்தால் பின்னர் மற்ற பிரிவு அதற்கு எதிராக தாக்குதல் தொடுப்பதற்கு உரிமை உண்டு.மேலும் அனைத்து கருத்து வேறுபாடுகளும், சச்சரவுகளும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்னால் வைக்கப்படும். மேலும் அன்னாரின் தீர்ப்பின் படி அனைவரும் செயல்பட வேண்டும். ஆனால், ஒவ்வொரு நபரும் அல்லது சமுதாயம் தொடர்பாக அவர்களின் மார்க்கம் மற்றும் அவர்களின் ஷரீஅத் சட்டத்திற்கு ஏற்ப தீர்ப்பு வழங்கப்படுவது அவசியமானதாக இருக்கும். என்ன தீர்ப்பு வழங்கப்படுமோ அது அவர்களின் மார்க்கம் மற்றும் அவர்களின் ஷரீஅத்திற்கு ஏற்ப அமைந்திருப்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விஷயம் ஆகும். முஸ்லிம்களின் அரசாங்கம் நிறுவப்பட்டு விட்ட போதிலும் இந்த விஷயம் ஒப்பந்தத்தில் இடம் பெற்றிருந்தது.

இந்த ஒப்பந்தத்தின் படி யூதர்கள் எவ்வாறு அமல் செய்தனர்?.......... இதற்கான பதில் என்னவென்றால், எல்லாரையும் விட முதலில் பனூ கைனுக்காஃ கோத்திரம் ஒப்பந்தத்தை முறித்தது. மேலும், நட்புரீதியிலான தொடர்புகளை முறித்துக் கொண்டு போருக்கான சூழலை உருவாக்கியது. மேலும் முஸ்லிம் பெண்களை அவமரியாதை செய்யக் கூடிய கீழ்தரமான வழிமுறையை மேற்கொண்டது. மேலும் பின்னர் அனைத்து சமுதாயங்களுடனும் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் அடிப்படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கிடைத்திருந்த தலைமைத்துவ அந்தஸ்திற்கு எதிராக யூதர்கள் மிகவும் ஆணவமும், அகம்பாவமும் மிக்க வடிவில் மோதினார்கள். தற்பெருமை வடிவில் அவர்கள் மோதல்போக்கை கையாண்டு விட்டனர். ஆனால், அவர்கள் முஸ்லிம்களுக்கு முன்னால் தோற்றுப்போனபோது, பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்களை மன்னித்து விட்டார்கள். மேலும் பனூ கைனுக்காஃ மதீனாவை விட்டு வெளியேறி வேறோர் இடத்திற்கு சென்று வசித்துக் கொள்ளட்டும்! என்ற அளவில் மட்டுமே முன்னெச்சரிக்கை திட்டத்தை மேற்கொண்டார்கள். இதனால், நகரத்தின் அமைதி சீர்குலையாமல் இருக்கும் ; மேலும் முஸ்லிம்கள் ஒளிந்திருக்கும் ஓர் எதிரியின் தீங்கிலிருந்து பாதுகாப்பு பெற்றுவிடுவார்கள் என்று கருதப்பட்டது. ஆக, பனூ கைனுக்காஃ கோத்திரத்தின் மக்கள் மிகவும் அமைதியாகவும், பாதுகாப்புடனும் தங்களது செல்வங்கள், மனைவி மறறும் பிள்ளைகளை தங்களுடன் அழைத்துக் கொண்டு மதீனாவை விட்டு வெளியேறி வேறோர் இடத்திற்கு சென்று குடியேறி விட்டார்கள். ஆனால், இந்த சம்பவத்திலிருந்து யூதர்களுடைய மற்ற கோத்திரங்கள் படிப்பினைப் பெறவில்லை. மாறாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கருணையானது அவர்களுக்கு மேலும் ஆகுமற்ற தைரியத்தை வழங்கிவிட்டது. மேலும் தற்போது அதிக காலம் கழிந்திருக்கவில்லை. அதற்குள் யூதர்களின் மற்ற கோத்திரங்களான பனூ நழீரும் தலை தூக்க ஆரம்பித்தது. மேலும் முதன்முதலில் அவர்களின் தலைவர் கஅப் பின் அஷ்ரப் உடன்படிக்கையை முறித்துக் கொண்டு குறைஷிகள் மற்றும் இதர அரேபிய கோத்திரங்களுடன் முஸ்லிம்களுக்கு எதிராக சதித் திட்டம் தீட்டத் துவங்கி விட்டனர். மேலும் அரேபியாவின் அந்த காட்டுமிராண்டிகளை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் அன்னாருடைய தோழர்களுக்கு எதிராக அபாயகரமான முறையில் தூண்டிவிட்டனர். மேலும், முஸ்லிம்களுக்கு எதிராக எப்படிப்பட்ட உணர்ச்சிகளையூட்டும் கவிதைகளைக் கூறினர் என்றால், அதனால் நாட்டில் முஸ்லிம்களுக்கு ஓர் அபாயகரமான சூழல் உருவாகி விட்டது. பின்னர் அந்த பேறிழந்தவன் கண்ணியத்திற்குரிய முஸ்லிம் பெண்மணிகளின் பெயரைக் குறிப்பிட்டு, குறிப்பிட்டு தனது கவிதைகளில் மிகவும் அருவருக்கத்தக்க வகையில் வசை பாடினான். மேலும் இறுதியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கொலை செய்வதற்கு சதித் திட்டம் தீட்டினான். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளையின் கீழ் இந்த நபர் தனது தண்டனையைப் பெற்றபோது, அவனது கோத்திரம் ஓர் உயிராக நின்று முஸ்லிம்களுக்கு எதிராக கிளர்ந்தெழுந்தது. மேலும் அந்த நாள் முதல் பனூ நழீர் உடன்படிக்கையை புறக்கணித்து விட்டு, முஸ்லிம்களுக்கு எதிராக சதித் திட்டத்தை தீட்டத் துவங்கியது. மேலும் இறுதியில் முழு அரேபியாவின் கோத்திரங்களும் ஒன்றுபட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கொலை செய்ய சதித் திட்டம் தீட்டியது.மேலும், என்ன நிகழ்ந்தாலும் அன்னாரை உயிருடன் விடக் கூடாது என்று முடிவெடுத்தனர்.

உள்ளபடியே முன்னர் செய்யப்பட்ட உடன்படிக்கையில், ஒருவர் தவறான செயலை செய்தால் பின்னர் அவருக்கு தண்டனை கொடுப்போம்; மகிழ்ச்சியுடன் கொடுப்போம் என்று இந்த விஷயங்களெல்லாம் இடம் பெற்றிருந்தன.

எவ்வாறிருப்பினும், அவர்களின் கொலை வெறித் திட்டங்களைக் குறித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தெரிய வந்தபோது, அன்னார் (ஸல்) அவர்களை எச்சரிக்கை செய்யக் கூடிய மற்றும் தண்டனை கொடுப்பதற்கான வழிமுறையை மேற்கொண்டார்கள். அப்போது, அவர்கள் மிகவும் ஆணவம் மிக்க வடிவில் முஸ்லிம்களுடன் போர் புரிவதற்கு தயாராகி விட்டனர். மேலும் இந்தப் போரில் பனூ குறைழா அவர்களுக்கு உதவி செய்தது. ஆனால், பனூ நழீர் தோற்று விட்டது. தற்போது இங்கு பனூ நழீர் பனூ குறைழாவிற்கு உதவியும் செய்தது. அவர்களும் உடன்படிக்கையை முறித்துக் கொண்டனர். ஆனால், பனூ நழீர் தோற்றுவிட்டபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பனூ குறைழாவை முற்றிலும் மன்னித்து விட்டார்கள். அவர்கள் பனூ நழீர் கோத்திரத்துடன் இணைந்து கொண்ட போதிலும், அன்னார் (ஸல்) பனூ குறைழாவை மன்னித்து விட்டார்கள். மேலும் பனூ நழீரையும் மதீனாவிலிருந்து அமைதி மற்றும் பாதுகாப்புடன் வெளியேறி சென்று விடுவதற்கு அனுமதி நல்கி விட்டார்கள். ஆனால், இந்தக் கருணைக்கு பகரமாக பனூ நழீர் செய்த செயல் இவ்வாறாக இருந்தது. அதாவது, இந்த கருணைக்குப் பகரமாக மதீனாவிலிருந்து வெளியில் சென்று அவர்களின் தலைவர்கள் அரேபியா முழுவதும் சுற்றி வந்தனர். மேலும் பல்வேறு அரேபியக் கோத்திரங்களை மிகவும் அபாயகரமான முறையில் முஸ்லிம்களுக்கு எதிராக தூண்டி விட்டு ஒரு பெரும் படையை மதீனாவிற்கு எதிராக ஒன்று திரட்டிக் கொண்டு வந்தனர். மிகப் பெரிய படையைக் கொண்டு வந்தனர். மேலும், இனி இஸ்லாத்தை முற்றிலும் அழித்து ஒழித்து விடாத வரை நாம் திரும்பி செல்ல மாட்டோம் என்ற உறுதியான உறுதி மொழியையும் அவர்களிடம் வாங்கினர்.

அது போன்ற அபாயகரமான நேரத்தைப் பற்றிய ஒரு சிறு சித்திரம் மேலே வரையப்பட்டு விட்டது. யூதர்களின் மூன்றாவது கோத்திரமான பனூ குறைழா என்ன செய்தது? மேலும், இது எப்படிப்பட்ட கோத்திரமாக இருந்தது என்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பனூ நழீர் போரின் சந்தர்ப்பத்தில் அவர்களின் நம்பிக்கைத் துரோகத்தை மன்னித்து சிறப்பான கருணை புரிந்திருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பனூ குறைழாவுடன் கருணைக்கான நடைமுறையை மேற்கொண்டிருந்தார்கள். பின்னர், அவர்கள் மீது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் புரிந்த இரண்டாவது கருணை இதுவாக இருந்தது. அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செய்து (மதீனா) வருவதற்கு முன்னர் வரை பனூ நழீர் அந்தஸ்திலும், உரிமையிலும் மிகவும் தாழ்ந்தவர்களாக கருதப்பட்டுக் கொண்டிருந்தனர். தற்போது பனூ நழீர் மற்றும் பனூ குறைழா என்ற இந்த இரு கோத்திரங்கள் இருந்தன. அவர்கள் இருவருக்கும் இடையிலும் அந்தஸ்துகளில் வேறுபாடு இருந்தது. பனூ குறைழா பனூ நழீர் கோத்திரத்தை விட தாழ்ந்தவர்களாக கருதப்பட்டனர். அதாவது, பனூ நழீர் கோத்திரதைச் சேர்ந்த ஒரு நபர் பனூ குறைழாவைச் சேர்ந்த ஒரு நபரின் கைகளால் கொல்லப்பட்டால் பின்னர் அந்தக்

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL MERCHANT
Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

கொலையாளி கஸாஸ் எனும் பழிவாங்குதல் என்ற நடவடிக்கையின் கீழ் கொல்லப்பட்டு வந்தார். இது அவர்களின் சட்டமாக இருந்தது. ஆனால், பனூ குறைழாவைச் சேர்ந்த ஒரு நபர் பனூ நழீரைச் சேர்ந்த ஒருவரின் கைகளால் கொல்லப்பட்டால் பின்னர் நஷ்டஈடு கொடுப்பதே போதுமானதாக கருதப்பட்டு வந்தது. அவரிடமிருந்து சிறிது தொகை பெற்று பின்னர் அவர் விடுவிக்கப்பட்டு வந்தார். ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பனூ குறைழாவிற்கு மற்ற குடிமக்களுடன் சமத்துவ மிக்க அதிகாரத்தை வழங்கினார்கள். ஆனால், இவ்வளவு மகத்தான கருணைகள் அவர்கள் மீது செய்யப்பட்டிருந்தபோதிலும், பனூ குறைழா நம்பிக்கை துரோகம் செய்தது. மேலும் நம்பிக்கை துரோகமும் கூட எப்படிப்பட்ட அபாயகரமான நேரத்தில் செய்தது என்றால், அதனால் அதுபோன்ற அபாயகரமான காலம் முஸ்லிம்கள் மீது ஒருபோதும் வந்ததில்லை. பனூ கைனுக்காஃவின் உதாரணம் அவர்களுக்கு முன்னால் இருந்தது. அவர்கள் அதிலிருந்து பயனடையவில்லை. பனூ நழீருடைய சம்பவம் அவர்களின் கண்களுக்கு முன்னால் நிகழ்ந்திருந்தது. அவர்கள் அதிலிருந்தும் படிப்பினை பெறவில்லை. மேலும் அவர்கள் இவ்வாறு செய்தனர். அதாவது தங்களது உடன்படிக்கையை புறக்கணித்து விட்டும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கருணைகளை மறந்து விட்டும், மூவாயிரம் முஸ்லிம்கள் முற்றிலும் ஆயுதங்கள் இன்றியும், இயலாமையின் நிலையிலும் நிராகரிப்பாளர்களுடைய பத்தாயிரம் படை வீரர்கள் மற்றும் இரத்த வெறி பிடித்த படையினரால் சூழப்பட்டிருந்தார்கள். மேலும், தமது இயலாமையைக் கண்டு அவர்கள் இதயம் பதைபதைத்துக் கொண்டிருந்த நிலையில் அதாவது அஹ்ஸாப் போர் நேரத்தில் இந்த நிலை இருந்தது. மரணம் அவர்களின் கண்களுக்கு முன்னால் தெரிந்து கொண்டு இருந்தது. மேலும் அப்படிப்பட்ட இந்த தருணத்தில் பனூ குறைழா தங்களது கோட்டைகளில் இருந்து வெளியேறினர். மேலும் முஸ்லிம் பெண்மணிகள் மற்றும் குழந்தைகள் மீது மறைந்திருந்து தாக்குதல் நடத்திக் கொண்டிருந்தனர். மேலும் முஸ்லிம்களின் கூட்டணியில் இருந்து வெளியேறி அந்த கொலைகார கூட்டத்தினருடன் இணைந்து கொண்டனர். அந்த கொலைகார கூட்டணியின் அசல் நோக்கம் இஸ்லாத்தையும், இஸ்லாத்தின் தோற்றுனரையும் அழிக்க வேண்டும் என்பதாக இருந்தது.இது மிகவும் சிந்திக்க வேண்டிய விஷயமாகும். ஆம், இஸ்லாத்தின் தோற்றுனர் மதீனாவிற்கு வருகை தந்த பிறகு அன்னார் செய்த முதல் பணி இதுவாக இருந்தது. அதாவது, அன்னார் அந்த யூதர்களை தமது நண்பராக ஆக்கினார்கள். மேலும் அவர்களுடன் உடன்படிக்கை செய்தார்கள். இது சிந்திக்க வேண்டிய விஷயமாகும். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு வருகை தந்து யூதர்களை தமது நண்பர்களாக ஆக்கிக் கொண்டார்கள்; மேலும் அவர்களுடன் உடன்படிக்கை செய்து கொண்டார்கள். யூதர்களின் முதல் பணி இதுவாக இருந்தது. அதாவது அவர்கள் தங்களது நண்பர்களையும், உடன்படிக்கையையும் ஏற்றுக் கொண்டுவிட்டு - அவர்கள் முதலில் ஒப்புக் கொண்டு விட்டனர் ; மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை தங்களது ஜனநாயக தலைவராக ஒப்புக் கொண்டு விட்டனர். பின்னர் ஏற்பட்ட சூழலில் பனூ குறைழாவின் இந்த செயலானது வெறும் ஓர் உடன்படிக்கை மீறுதல் மற்றும் நம்பிக்கை துரோகம் என்ற அளவில் மட்டும் இருக்கவில்லை. மாறாக, ஓர் அபாயகரமான கிளர்ச்சியின் வடிவத்தையும் கொண்டிருந்தது. மேலும், கிளர்ச்சியும் எப்படிப்பட்டதாக இருந்தது என்றால், அவர்களின் சதித் திட்டங்கள் வெற்றி பெற்றிருந்தால் பின்னர் முஸ்லிம்களின் உயிர்களும் அவர்களின் கண்ணியமும், அவர்களின் மார்க்கமும் நிச்சயமாக அழிந்திருக்கும்.

எனவே பனூ குறைழா ஏதோ ஒரு (சாதாரண) குற்றத்தை மட்டும் இழைத்திருக்கவில்லை. மாறாக, அவர்கள் நன்றிகேடு மற்றும் நன்றி மறத்தல் போன்ற குற்றங்களை இழைத்திருந்தனர். உடன்படிக்கை மீறுதல் மற்றும் நம்பிக்கை துரோகம் போன்ற குற்றங்களையும் புரிந்திருந்தனர். கிளர்ச்சி மற்றும் கொலை நடவடிக்கை போன்ற குற்றங்களையும் இழைத்திருந்தனர். மேலும் இந்தக் குற்றங்களையெல்லாம் அவர்கள் எப்படிப்பட்ட நேரத்தில் புரிந்திருந்தனர் என்றால், ஒரு குற்றமானது மிக,மிக மோசமான அபாயகரமான சூழலை உருவாக்கி விட்டது. மேலும், உலகின் காழ்ப்புணர்ச்சியற்ற எந்தவொரு நீதிமன்றமும் அவர்களின் வழக்கில் அவர்களின் குற்றங்களுக்கு எந்தவொரு சலுகைக்கான முகாந்திரத்தையும் காணமுடியாது. அதாவது எந்தவொரு நீதிமன்றத்திலும் அது போன்ற நிலைமைகளில் இந்த குற்றவாளிகளுக்கு எந்தவொரு சலுகைகளும் கொடுப்பதற்கு சாத்தியமில்லை.

அது போன்ற நிலைமைகளில் அந்தக் குற்றவாளிகளுக்கான தண்டனை என்பது அவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனையை விட வேறு என்னவாக இருந்திருக்க முடியும்? வெளிப்படையில் மூன்று தண்டனைகள் மட்டுமே வழங்கப்பட்டிருக்க முடியும் என்பது வெளிப்படையாகும். முதலாவது, மதீனாவிலேயே அவர்களை கைதிகளாக வைப்பது ; அல்லது வீட்டுச் சிறையில் அடைப்பது. இரண்டவாது, நாடு கடத்துவது, பனூ கைனுக்காஃ மற்றும் பனூ நழீருடைய விவகாரத்தில் நிகழ்ந்ததைப் போன்று. மூன்றாவது, போர் வீரர்களைக் கொலை செய்தும், மற்றவர்களை கைது செய்து அல்லது வீட்டுச் சிறையில் வைப்பதும் ஆகும். தற்போது ஒருவர் நீதியுடன் சிந்தித்துப் பார்க்கட்டும். அதாவது, அக்காலத்தின் நிலைமைகளுக்கு ஏற்ப முஸ்லிம்களுக்கு எந்த வழிமுறை எளிதானதாக இருந்தது? ஒன்று, எதிரி சமுதாயத்தை தமது நகரத்தில் கைது செய்து வைப்பது, அக்காலத்தின் அடிப்படையில் இது முற்றிலும் கேள்விக்கு அப்பாற்பட்டதாக இருந்தது. ஏனெனில், முதலில், கைது செய்யப்பட்ட உடனேயே அந்தக் கைதிகளின் தங்குமிடம் மற்றும் உணவுக்கான பொறுப்பு முஸ்லிம்களின் மீது வந்து விடுகின்றது. அதனை பொறுத்துக் கொள்வதற்கு அவர்களிடம் ஒருபோதும் ஆற்றல் இருந்திருக்கவில்லை. இரண்டாவதாக, அக்காலத்தில் சிறைச்சாலை போன்ற எந்தவொரு வசதியும் இருந்திருக்கவில்லை. மேலும், கைதிகள் தொடர்பாக அக்காலத்தில் இந்த சட்டமே நடைமுறையில் இருந்தது. அதாவது அவர்கள் வெற்றிபெற்ற சமுதாயத்தின் நபர்களிடத்தில் பகிர்ந்தளிக்கப்பட்டு வந்தார்கள். அதில் அவர்கள் செயல்நிலையில் முற்றிலும் சுதந்திரமானவர்களாக இருந்தனர். எனவே அபாயகரமான அந்த நிலைமைகளில், ஒரு கீழான எதிரி, சதித்திட்டங்களை தீட்டக் கூடிய ஒருக் கூட்டம் மதீனாவில் வசிப்பதும் தன்னகத்தே மிகவும் அபாயகரமான சூழ்நிலைகளைக் உருவாக்கக் கூடியதாக இருந்தது. மேலும், பனூ குறைழாவின் மீது இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தால், பின்னர் நிச்சயமாக அதன் பொருள் இதுவாக இருந்தது. அதாவது, குழப்பம் விளைவிப்பதற்கும், தீங்கு விளைவிப்பதற்கும் மற்றும் இரகசியமான திட்டங்களைத் தீட்டுவதற்கும் அவர்களுக்கு முன்னர் இருந்த அதே சுதந்திரம் தற்போதும் வழங்கப்படுகின்றது என்பதே அதன் பொருளாக இருந்தது. அதுமட்டுமின்றி செலவீனங்களுக்கான பொறுப்பும் முஸ்லிம்கள் மீது வந்து விடுகின்றது. அதாவது, முன்னர் அவர்கள் சுயமே உண்டு வந்தனர் ; மேலும் முஸ்லிம்களின் கழுத்தை அறுத்து வந்தனர்.ஆனால், தற்போது அவர்கள் இங்கு நகரத்தில் வசித்து வந்தால் பின்னர் அவர்களுக்கு முற்றிலும் சுதந்திரம் வழங்கப்பட்டதாக ஆகிவிடும். அதாவது, அவர்கள் முஸ்லிம்களின் உணவை உண்டு அவர்கள் முஸ்லிம்களின் கழுத்தையும் வெட்டக் கூடியவர்களாக இருப்பர். (அதாவது அவர்களை சிறைபிடித்து கைதிகளாக முஸ்லிம்கள் வைத்திருந்தால் இந்த நிலையே ஏற்பட்டிருக்கும். அதுவும் முஸ்லிம்களிடத்தில் தங்களது உணவுக்கே எதுவும் இல்லாத நிலை இருந்தது) அவர்களோ சதித் திட்டங்களைத் தீட்டக் கூடியவர்களாகவே இருந்தனர். மேலும், முஸ்லிம்களின் வீடுகளில் அவர்கள் மற்றவர்களுடன் இணைந்து வசிக்கும் காரணத்தினால் இன்னும் பல அபாயங்கள் இருந்தன.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் மேலும் எழுதுகின்றார்கள்:

அதுபோன்ற நிலைமைகளில் பனூ குறைழாவிற்கு இந்த தண்டனை வழங்கப்பட்டிருக்க வேண்டும் ; அதாவது அவர்களை அங்கு வைத்திருக்க வேண்டும் என்று ஓர் அறிவுடைய நபர் கருதுவார் என்று என்னால் ஒப்புக் கொள்ள முடியாது.

தற்போது எஞ்சியிருக்கும் இரண்டாவது தண்டனை என்பது நாடு கடத்துதல் ஆகும். ஆக, இந்தத் தண்டனையும் அந்தக் காலத்தின் அடிப்படையில் எதிரிகளின் தீங்கிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்கு ஒரு சிறந்த வழிமுறையாக கருதப்பட்டு வந்தது. ஆனால், பனூ நழீர் கோத்திரத்தை நாடு கடத்தியதில் கிடைத்த அனுபவம் இவ்வாறாக இருந்தது: அதாவது, குறைந்தபட்சம் யூதர்களைப் பொருத்த வரை இந்த வழிமுறை எந்த வகையிலும் முந்தையை வழிமுறையைக் காட்டிலும் அபாயம் குறைந்த வழிமுறையாக இருக்கவில்லை. அதாவது யூதர்கள் மதீனாவிலிருந்து முற்றிலும் வெளியே சென்று விடுவதற்கு அனுமதி கொடுத்து விடுவது என்பது, செயல் நிலையிலும் இஸ்லாத்திற்கு எதிரான போர் வீரர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு காரணமாக அமைந்து விடும் என்பதே அதன் பொருளாக இருந்தது. இன்னும் கூறுவதாயின், இஸ்லாத்தின் எதிரிகளின் அணிகளில் சென்று இப்படிப்பட்ட மக்கள் இணைந்து விடுவார்கள்; மேலும் அவர்கள் தமது அபாயகரமான கிளர்ச்சியூட்டும் எண்ணங்களாலும், திட்டங்களாலும் பகைமையுணர்வையூட்டி மறைமுகமான மற்றும் இரகசியமான நடவடிக்கைகளின்

மூலமான திட்டங்களுக்கு தலைவராக ஆகுவதற்கு இஸ்லாத்தின் எல்லா எதிரியும் நிம்மதியற்றவராக இருந்தார். வராற்றிலிருந்து நிரூபணமாகின்றது. அதாவது, யூதர்களின் அனைத்து கோத்திரங்களிலும் பனூ குறைழா தனது பகைமையில் மிகவும் முன்னேறி இருந்தது. எனவே நிச்சயமாக, பனூ குறைழாவை நாடு கடத்துவது என்பது மிகவும் அபாயகரமான சூழலை உருவாக்கக் கூடியதாக இருந்தது. அதாவது பனூ நழீர் அஹ்ஸாப் போருக்கான சூழலை உருவாக்கி முஸ்லிம்களுக்கு நெருக்கடியை உருவாக்கியிருந்ததைப் போன்ற அபாயம் இருந்தது. மேலும் முஸ்லிம்கள் அவ்வாறு செய்திருந்தால் பின்னர் அக்காலத்தின் நிலைமைகளுக்கு ஏற்ப அவர்களின் இந்த செயல் நிச்சயமாக தற்கொலைக்கு சமமானதாக இருந்திருக்கும். ஆனால், உலகின் மூலையில் இப்படிப்பட்ட ஏதாவது ஒரு சமுதாயம் இருக்கின்றதா? அதாவது தனது எதிரியை உயிருடன் வைப்பதற்காக தாம் சுயமே தற்கொலைக்கு தயாரகி விடக் கூடிய ஒரு சமுதாயம் இருக்க முடியுமா? அப்படிப்பட்ட ஒரு சமுதாயம் இருக்க முடியாதபோது, பின்னர் நிச்சயமாக முஸ்லிம்களும் இந்தக் காரணத்தினால் ஆட்சேபனைக்குரியவர்களாக இருக்க முடியாது. அதாவது, அவர்கள் பனூ குறைழா கோத்திரத்தை உயிருடன் வைப்பதற்காக ஏன் தற்கொலை செய்து கொள்ளவில்லை? என்று முஸ்லிம்கள் மீது கேள்வி எழுப்ப முடியாது. எனவே இந்த இரண்டு தண்டனைகளும் சாத்தியமற்றதாக இருந்தன. மேலும் அவற்றில் ஏதாவது ஒன்றை மேற்கொள்வது என்பதும் தங்களைத் தாங்களே முஸ்லிம்கள் அபாயத்தில் ஆழ்த்திக் கொள்வதற்கு ஒப்பானதாகவே இருந்தது. மேலும் இந்த இரண்டு தண்டனைகளையும் விட்டு விட்டால் பின்னர் எந்தப் பாதை மேற்கொள்ளப்பட்டதோ அது மட்டுமே வழியாக இருந்தது. நிச்சயமாக ஸஅது (ரலி) அவர்களின் தீர்ப்பு ஒரு கடுமையான தீர்ப்பாக இருந்தது. மேலும் மனித இயல்பானது வெளிப்படையில் அதனால் துன்பத்தை உணரக் கூடியதாக இருக்கின்றது. ஆனால், கேள்வி என்னவென்றால், அதைத் தவிர மேற்கொள்வதற்கு வேறு ஏதாவது வழி இருந்ததா? என்பதே கேள்வி ஆகும்.

ஓர் அறுவை சிகிச்சை மருத்துவர் தமது ஏதாவது நோயாளிக்கு இதுபோன்ற அறுவை சிகிச்சையை அவசியமானதாக கருதும்போது, அவர் கைகளை வெட்டி விடுவார் அல்லது கால்களை வெட்டி விடுவார் அல்லது வேறு ஓர் உறுப்பை உடலிருந்து துண்டித்து வெட்டி எடுக்கின்ற நிர்பந்தத்திற்கு அவர் ஆளாகி விடுகின்றார். எனவே அதனால் கண்ணியமிக்க ஒவ்வொரு நபரின் உள்ளத்திற்கும் வேதனை ஏற்படக் கூடும். ஆனால், அவர் அப்படி செய்யவில்லை என்றால் உயிருக்கே பங்கம் வந்து விடும். அதாவது அது போன்ற நிலைமைகளில் அறுவை சிகிச்சை அவசியமானதாக ஆகிவிட்டால் பின்னர் அவரது செயல் சரியானதாகவே இருக்கும். ஏனெனில், சூழ்நிலைகளின் கட்டாயத்திற்கு அவர் தலைவணங்கி விடுகின்றார். இன்னும் கூறப்போனால், அது போன்ற நிலைமைகளில் அறுவை சிகிச்சை நிபுணரின் இந்த செயல் போற்றுதலுக்குரியதாக கருதப்படும். அதாவது அவர் சிறிய அல்லது குறைந்த மதிப்புக் கொண்ட பகுதியை தியாகம் செய்து விலை மதிப்பற்ற உயிரை காப்பாற்றி விட்டார் என்ற பாராட்டுதலுக்கு தகுதி படைத்தவராக அவர் இருப்பார். இதே போன்று பனூ குறைழா குறித்து ஸஅது (ரலி) அவர்களுடைய தீர்ப்பு என்பது சுயமே கடினமானதாக இருந்தது. ஆனால், அது சூழ்நிலையின் கட்டாயத்தினால் ஏற்பட்ட ஒரு கட்டாய விளைவாக இருந்தது. அதைத் தவிர வேறு வழியே இருக்கவில்லை. இதன் காரணமாகவே ஒருபோதும் இஸ்லாத்தின் நண்பர்களின் வட்டத்தை சாராதவராக இருந்த மார்கோலஸ் போன்ற வரலாற்றாசிரியர் கூட இந்த சந்தர்ப்பத்தில் ஸஅது (ரலி) அவர்களின் தீர்ப்பு அப்போதிருந்த நிலைமைகளை அடித்தளமாக கொண்டிருந்தது என்பதை ஒப்புக் கொள்ளும் கட்டாயத்திற்கு ஆளாகியிருந்தார். மேலும் அவருக்கு அதைத் தவிர வேறு வழியே இருக்கவில்லை.

ஆக, மிஸ்டர் மார்கோலஸ் ஸாஹிப் எழுதுகின்றார்: அஹ்ஸாப் போர் தாக்குதல் - அதனைக் குறித்து முஹம்மது (ஸல்) அவர்களுடைய வாதம் இவ்வாறாக இருந்தது. அதாவது அது இறை ஆதிக்கத்தின் கீழ் நிகழ்ந்த தோல்வியுற்ற கோத்திரமான பனூ நழீருடைய தீங்கிழைப்பதற்கு செய்யப்பட்ட முயற்சியின் விளைவாக இருந்தது அல்லது குறைந்தபட்சம் இவ்வாறு அது புரிந்து கொள்ளப்பட்டிருந்தது. அதாவது அஹ்ஸாப் போர் என்பது பனூ நழீர் கோத்திரத்தாரின் முயற்சியின் விளைவு ஆகும். மேலும், பனூ நழீர் கோத்திரம் எப்படிப்பட்ட கோத்திரமாக இருந்தது என்றால், அவர்களை நாடு கடத்துவதை மட்டுமே முஹம்மது ஸாஹிப் போதுமானதாக கருதியிருந்தார்கள்.

தற்போது எழுகின்ற கேள்வி இதுவாகும். அதாவது முஹம்மது ஸாஹிப் அவர்கள் பனூ குறைழாவையும் நாடுகடத்தி, தங்களுக்கு எதிராக தீங்கு விளைவிக்கும் முயற்சிகளில் ஈடுபடக் கூடியவர்களின் எண்ணிக்கையிலும், வலிமையிலும் கூடுதல் ஏற்படச் செய்ய அவர்களை விட்டுவிட வேண்டுமா? என்பதாகும். மற்றொரு பக்கம் அந்தக் கோத்திரம் மதீனாவிலேயே தங்குவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தால் பின்னர் எந்த சமுதாயம் இவ்வளவு பகிரங்கமாக தாக்குதல் தொடுத்தவர்களுக்கு உதவினார்களோ அவர்களுடைய நாடுகடத்துவது பாதுகாப்பற்ற வழிமுறையாக இருந்தது. ஆனால், அவர்கள் மதீனாவில் வசிப்பதும் மிகவும் அபாயகரமானதாக இருந்தது. எனவே அவர்கள் கொலை செய்யப்பட வேண்டும் என்ற இந்த தீர்ப்பைத் தவிர வேறு வழியே இருக்கவில்லை.

இதனை மார்கோலஸ் ஸாஹிப் கூறுகின்றார்.

அடுத்து, இதனையும் சிறப்பாக நினைவிற் கொள்ள வேண்டும். அதாவது, பனூ குறைழா ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நட்புக் கோத்திரமாகவும், உடன்படிக்கையின் கீழும் மட்டும் இருக்கவில்லை. மாறாக, அவர்கள் துவக்க கால ஒப்பந்தத்தின் அடிப்படையில் மதீனாவில் அன்னாருடைய அரசாங்கத்தை ஒப்புக் கொண்டிருந்தனர் அல்லது குறைந்தபட்சம் அன்னாரின் இறையாண்மையை அவர்கள் ஒப்புக் கொண்டிருந்தனர். எனவே அவர்களின் நிலை என்பது வெறும் ஒரு நம்பிக்கைத் துரோகம் செய்த கோத்திரம் அல்லது சாதாரண எதிரி என்ற நிலையில் இருக்கவில்லை. மாறாக, நிச்சயமாக அவர்கள் கிளர்ச்சியாளர்களாகவும் இருந்தனர். மேலும் அவர்கள் எப்படிப்பட்ட கிளர்ச்சியாளர்கள் என்றால் மிகவும் அபாயகரமான வகையைச் சேர்ந்த கிளர்ச்சியாளர்களாக இருந்தனர். மேலும், கிளர்ச்சியாளர்களுக்கான தண்டனை என்பது அதிலும் குறிப்பாக போரின் நாட்களில் மரணத் தண்டனையைத் தவிர வேறு ஒரு தண்டனை இருக்கும் என்றும் கருத முடியாது.

கிளர்ச்சியாளர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்படவில்லை என்றால் பின்னர் அரசாங்க அமைப்பு முற்றிலும் சிதைந்து விடும். மேலும் கயவர்கள் மற்றும் குழப்பம் செய்யக் கூடிய மக்களுக்கு எப்படிப்பட்ட தைரியம் வந்து விடும் என்றால், அது பொது அமைதி மற்றும் பொது மக்களின் நலனுக்கு கடுமையான அழிவை ஏற்படுத்தக் கூடியதாக நிரூபணமாகும். மேலும் நிச்சயமாக அதுபோன்ற நிலைமைகளில் கிளர்ச்சியாளர்கள் மீது கருணை புரிவது உள்ளபடியே நாடு மற்றும் நாட்டின் அமைதியை விரும்பக் கூடிய மக்கள் மீது செய்யப்படக் கூடிய அநீதிக்கு ஒப்பானதாக இருக்கும்.

ஆக, அனைத்து நாகரீகம் கொண்ட அரசாங்கங்களும் இக்காலம் வரை அதுபோன்ற கிளர்ச்சியாளர்களுக்கு அவர்கள் ஆணாக இருந்தாலும் சரி அல்லது பெண்ணாக இருந்தாலும் மரண தண்டனையே வழங்கி வருகின்றது. மேலும் அறிவு படைத்த எந்தவொரு மனிதரும் அதில் ஆட்சேபனை செய்தது கிடையாது. எனவே ஸஅத் (ரலி) அவர்களின் தீர்ப்பு முற்றிலும் நீதியானதும், நீதி மற்றும் நேர்மையின் சட்டத்திட்டங்களுக்கு முற்றிலும் ஏற்புடையதுமாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது உறுதி மொழியின் காரணத்தினால் அந்தத் தீர்ப்பு தொடர்பாக கருணையின் அம்சத்தை சில நபர்களைத் தவிர்த்து அனைவருக்காகவும் மேற்கொள்ள முடியாமல் இருந்தார்கள். மேலும், அன்னார் (ஸல்) அதற்காக முழு முயற்சி செய்தார்கள்.

அதாவது, ஓரிரு நபர்கள் இருந்தனர். அவர்கள் மன்னிப்புக் கேட்டிருந்தால் அவர்களை அன்னார் (ஸல்) மன்னித்திருக்க முடியும். ஆனால், முழு சமுதாயத்தையும் மன்னித்திருக்க முடியாது. ஏனெனில், ஹஸ்ரத் ஸஅத் (ரலி) அவர்கள் அன்னாரிடம் இந்த உறுதிமொழி பெற்றிருந்தார்கள். ஆனால், அன்னாரை நீதிபதியாக ஒப்புக் கொள்வதற்கு மறுத்து விட்டிருந்த தங்களது அந்த வெட்க உணர்வினால் அன்னாரின் பக்கம் கருணைக்கான முறையீடு செய்வதன் பக்கம் யூதர்கள் அதிகம் கவனம் செலுத்தவில்லை. மேலும், முறையீடு செய்யாமல் அன்னார் (ஸல்) எவரையும் மன்னிக்க முடியாதவராக இருந்தார்கள் என்பது வெளிப்படையாகும். ஏனெனில், கிளர்ச்சியாளர்கள் தமது குற்றத்தின் மீது வெட்க உணர்வை வெளிப்படுத்தாமல் இருக்கும்போது பின்னர் சுயமாகவே அவர்களை விட்டு விடுவது அரசியல் ரீதியாக பெரும் அபாயகரமான விளைவை உருவாக்கி விடக் கூடும்.

மற்றொரு விஷயத்தையும் நினைவிற் கொள்ள வேண்டும்; அதாவது, அந்த உடன்படிக்கையின் கீழ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எப்போதும்

*நபிமொழியிலிருந்து...*

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

யூதர்களைக் குறித்து மூஸவி ஷரீஅத் சட்டத்திற்கு ஏற்பவே தீர்ப்பளித்து வந்தார்கள். தற்போது நாம் தவ்ராத்தின் மீது பார்வையை செலுத்தினால், பின்னர் அங்கு பனூ குறைழா செய்திருந்த இது போன்ற குற்றத்திற்கான தண்டனை என்பது ஸஅது பின் முஆஸ் (ரலி) அவர்கள் பனூ குறைழாவிற்கு எதிராக வழங்கியிருந்த அதே தீர்ப்புதான் அங்கேயும் எழுதப்பட்டிருக்கின்றது.

ஆக,பைபிளில் இந்த இறைக் கட்டளை இடம் பெற்றிருக்கின்றது:

நீ ஒரு பட்டணத்தின் மேல் யுத்தம் பண்ண நெருங்கும்போது, அந்தப் பட்டணத்தாருக்குச் சமாதானம் கூறக்கடவாய். அவர்கள் உனக்குச் சமாதானமான உத்தரவு கொடுத்து, வாசலைத் திறந்தால் அதிலுள்ள ஜனங்கள் எல்லாரும் உனக்குப் பகுதி கட்டுகிறவர்களாகி, உனக்கு ஊழியஞ்செய்யக்கடவர்கள். அவர்கள் உன்னோடு சமாதானப்படாமல், உன்னோடே யுத்தம் பண்ணுவார்களானால் நீ அதை முற்றுகைபோட்டு, உன் தேவனாகிய கர்த்தர் அதை உன் கையில் ஒப்புக் கொடுக்கும்போது, அதிலுள்ள புருஷர்கள் எல்லாரையும் பட்டயக்கருக்கினால் வெட்டி, ஸ்திரீகளையும், மிருக ஜீவன்களையும் மாத்திரம் உயிரோடு வைத்து பட்டணத்திலுள்ள எல்லாவற்றையும் கொள்ளையிட்டு, உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு ஒப்புக் கொடுத்த உன் சத்துருக்களின் கொள்ளைப் பொருளை அனுபவிப்பாயாக. இந்த ஜாதிகளைச் சேர்ந்த பட்டணங்களாயிராமல், உனக்கு வெகு தூரத்திலிருக்கிற சகல பட்டணங்களுக்கும் இப்படியே செய்வாயாக. (உபாகமமம்: அதிகாரம் 20, வசனங்கள் 10 -15)

யூதர்களின் ஷரீஅத்துடைய இந்தக் கட்டளை வெறும் ஒரு நம்பிக்கை துரோகம் செய்ததற்கான கட்டளையாக இருக்கவில்லை. அதன்படி ஒருபோதும் அமல் செய்யப்படவில்லை. மாறாக, பனீ இஸ்ராயீல் எப்போதும் இதன்படியே செயல்பட்டு வந்துள்ளது. மேலும், யூதர்களின் விவகாரங்கள் எப்போதும் இதன்படியே தீர்க்கப்பட்டு வந்தன. எனவே உதாரணமாக இதனை படியுங்கள்:

கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே அவர் மீதியானியருடன் யுத்தம் பண்ணி, புருஷர்கள் யாவரையும் கொன்று போட்டார்கள். அவர்களைக் கொன்று போட்டதுமன்றி, மீதியானியரின் ஐந்து ராஜாக்களாகிய ஏவி, ரேக்கம், சூர், ஊர், ரேபா என்பவர்களையும் கொன்றுபோட்டார்கள். பேயோரின் குமாரனாகிய பிலேயாமையும் பட்டயத்தினாலே கொன்றுபோட்டார்கள். அன்றியும் இஸ்ரவேல் புத்திரர் மீதியானியரின் ஸ்திரீகளையும், குழந்தைகளையும் சிறைபிடித்து, அவர்களுடைய மிருக ஜீவன்களாகிய ஆடுமாடுகள் யாவையும், மற்ற ஆஸ்திகள் யாவையும் கொள்ளையிட்டு, அவர்கள் குடியிருந்த ஊர்கள், கோட்டைகள் யாவையும் அக்னியால் சுட்டெரித்து, தாங்கள் கொள்ளையிட்ட பொருளையும் தாங்கள் பிடித்த நரஜீவன் மிருகஜீவன் அனைத்தையும் சேர்த்து, சிறைபிடிக்கப்பட்ட மனிதரையும், மிருகங்களையும், கொள்ளையிட்ட பொருட்களையும் எரிகோவின் அருகேயுள்ள யோர்தானுக்கு இக்கரையில் மோவாபின் சமனான வெளிகளிலுள்ள பாளயத்திலிருந்த மோசேயினிடத்துக்கும், இஸ்ரவேல் புத்திரராகிய சபையாரிடத்துக்கும் கொண்டு வந்தார்கள். (எண்ணாகமம் அதிகாரம் 31, வசனங்கள் 7 முதல் 12 வரை)

ஹஸ்ரத் மஸீஹ் நாஸிரீயுடைய வாழ்வில் ஆட்சி கிடைக்கவில்லை தான் ; மேலும் போர் செய்வதற்கான சந்தர்ப்பம் வரவில்லை. அவ்வாறு நிகழ்ந்திருந்தால் அன்னாருடைய செயல்வழிமுறை வெளிப்பட்டிருக்கக் கூடும். ஆால், அன்னாருடைய சில வாக்கியங்களிலிருந்து நம்மால் அனுமானித்துக் கொள்ள முடியும். கயவர்கள் மற்றும் அசுத்தமான உள்ளம் கொண்ட எதிரிகள் தொடர்பாக அன்னாருடைய எண்ணங்கள் அதாவது ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் எண்ணங்கள் என்னவாக இருந்தன? என்பதை நம்மால் இதிலிருந்து அனுமானித்துக் கொள்ள முடிகின்றது. ஆக, தமது எதிரிகளை விளித்து ஹஸ்ரத் மஸீஹ் (அலை) கூறுகின்றார்கள்:

பாம்புகளே! பாம்பின் பிள்ளைகளே! நீங்கள் நரகத்தின் தண்டனையிலிருந்து ஏன் ஒடுகின்றீர்கள்? (மத்தேயு, வசனம் 23)

அதாவது மக்களே! நீங்கள் விஷப் பாம்புகளைப் போன்று கொல்லப்படுவதற்கு தகுதியானவர்கள் ஆவீர்கள். ஆனால், உங்களுக்கு தண்டனையளிப்பதற்கு என்னிடம் அதற்கான ஆற்றல் இல்லை. ஆனால், நீங்கள் இறைவனுக்கு அஞ்சுங்கள்; மேலும் நரகத் தண்டனையை எண்ணிப்பார்த்தாவது, உங்களது தீய முடிவுகள் மற்றும் தீங்குகளிலிருந்து விலகிக் கொள்ளுங்கள். அநேகமாக இதுவே காரணமாக இருக்கின்றது. அதாவது, ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களைப் பின்பற்றக் கூடியவர்களுக்கு உலகில் அதிகாரம் கிடைத்தபோது, அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களின் இந்த போதனைக்கு ஏற்ப செயல்பட்டார்கள். அதாவது கயவர்கள் மற்றும் தீய நடத்தைக் கொண்ட எதிரிகள் பாம்புகள் மற்றும் தேள்களைப் போன்று கொல்லப்படுவதற்கு தகுதி படைத்தவர்கள் ஆவர் என்ற போதனைக்கு ஏற்ப செயல்பட்டனர். அதாவது மஸீஹை பின்பற்றியவர்கள் அந்நிலையில் எவர்களையெல்லாம் தீய நடத்தைக் கொண்டவர்களாகவும், கயவர்களாகவும் கருதினார்களோ மேலும் எவர்களையெல்லாம் தமது எண்ணங்களுக்கு எதிரானவர்களாக கருதினார்களோ அவர்களை அழிப்பதற்கு சற்றும் தயங்கவில்லை. நமக்கு இது தென்படுகின்றது.

ஆக, கிறிஸ்தவ சமுதாயத்தின் வரலாறு இது போன்ற உதாரணங்களால் நிறைந்து இருக்கின்றது.

சுருக்கம் என்னவென்றால், ஸஅத் (ரலி) அவர்களின் தீர்ப்பு தன்னகத்தே கடுமையானதாக புரியப்படுகின்றது. ஆனால், அது ஒருபோதும் நீதி மற்றும் நேர்மைக்கு எதிரானதாக இருக்கவில்லை. நிச்சயமாக குற்றத்தின் தன்மை மற்றும் முஸ்லிம்களின் பாதுகாப்பிற்கான கேள்வி; இந்த இரண்டு விஷயங்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு அதனை பார்க்கும்போது, இந்த தீர்ப்பே வழங்கப்பட்டிருக்க வேண்டும். மேலும் இந்தத் தீர்ப்பும் கூட யூத ஷரீஅத்திற்கு முற்றிலும் ஏற்புடையதாக இருந்தது. இன்னும் கூறப்போனால், ஆரம்பகால உடன்படிக்கைக்கு ஏற்ப தீர்ப்பு கொடுப்பது அவருக்கு அவசியமானதாக இருந்தது. ஏனெனில், அதன் அடிப்படையில் முஸ்லிம்கள் இந்த விஷயத்திற்கு கட்டுப்பட்டவர்களாக இருந்தனர். அதாவது, யூதர்கள் தொடர்பாக அவர்களுடைய ஷரீஅத்திற்கு ஏற்ப தீர்ப்பு வழங்க வேண்டும் என்பதற்கு கட்டுப்பட்டிருந்தனர். ஆயினும், என்ன இருந்தாலும் இந்தத் தீர்ப்பு ஹஸ்ரத் ஸஅத் பின் முஆஸ் (ரலி) அவர்களின் தீர்ப்பாக இருந்தது. அது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தீர்ப்பாக இருக்கவில்லை. மேலும், ஸஅத் (ரலி) அவர்கள் மீதே அதற்கான அசல் மற்றும் இறுதி பொறுப்பு சுமத்தப்படுகின்றது. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொடர்பாக அரசாங்கத்தின் அதிபர் என்ற ரீதியில் இந்த விவகாரத்தில் இந்த அளவிற்கு மட்டுமே பொறுப்பு இருந்தது. அதாவது, அன்னார் (ஸல்) இந்தத் தீர்ப்பை தமது அரசாங்க ஏற்பாட்டின் கீழ் செயல்படுத்துவதற்கு பொறுப்புடையவர்களாக இருந்தார்கள். மேலும், அன்னார் (ஸல்) அதனை எந்த அளவிற்கு சிறப்பான வடிவில் அந்தத் தீர்ப்பை செயல்படுத்திக்காட்டினார்கள் என்றால், அது தற்காலத்து நாகரீகம் மிக்க மற்றும் கருணை மிக்க அரசாங்கங்களுக்கும் சிறந்த முன்மாதியாக கருதப்பட முடியும் என்ற விஷயம் ஏற்கனவே கூறப்பட்டு விட்டது. (ஸீரத் காத்தமுன் நபிய்யீன், ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் எம்.ஏ (ரலி) அவர்கள், பக்கம் 605- 613 )

எனவே இன்றைய நாட்களில் இஸ்லாத்தின் மீது இந்த மக்கள் .இந்த ஆட்சேபனையை செய்கின்றனர். மேலும் அதன் விளைவாக, நமது சில மக்களும் கூட தாக்கத்தின் கீழ் வந்து விடுகின்றனர். பனூ குறைழா கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் ஏன் கொல்லப்பட்டார்கள்? என்று இளைஞர்களிடமும் கேள்வி எழுகின்றது. அதனை காரணமாக ஆக்கிக் கொண்டு, கேள்வி எழுப்பக் கூடிய சில மக்கள் இவ்வாறும் கூறத் தொடங்கி விட்டனர். அதாவது, பாலஸ்தீனத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளும் கூட இந்த அடிப்படையில் ஆகுமானதாகும் என்று கூறுகின்றனர். ஆனால், அதற்கு, அப்போது இருந்த சூழலுக்கும், தற்போது இருக்கின்ற நிலைமைகளுக்கும் எந்த வகையிலும் ஒப்புமை கிடையாது. இவர்கள் பழிவாங்குகின்றார்கள் என்று வைத்துக் கொண்டாலும் கூட பின்னர் இவர்கள் பெண்களையும், குழந்தைகளையும் அல்லவா கொலை செய்து கொண்டிருக்கின்றனர். எவ்வாறு இருப்பினும், இதற்கான அனைத்து பொறுப்பும் முஸ்லிம்களின் மீதே இருக்கின்றது. அவர்களோ தங்களது சுயநலனுக்காக இஸ்லாத்தின் கண்ணியத்தையே அழித்து விட்டனர். அல்லாஹ் அந்த மக்களுக்கும் அறிவை வழங்குவானாக.

(அல்ஃபஸ்ல் பத்திரிகை இன்டர்நேஷனல், நவம்பர் 22, 2024, பக்கம் 2 - 6)

தமிழாக்கம்
மவ்லவி
A.அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * *

திருக்குர்ஆனிலிருந்து...

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

# ஜுமுஆ பேருரை

பனூ குறைழா போர் முடிவுற்றபோது வழங்கப்பட்ட தண்டனை
மற்றும் இதர சூழ்நிலைகளும் சம்பவங்களும்

பனூ குறைழா விவகாரத்தில் தீர்ப்பு வழங்குவதற்காக ஹஸ்ரத் ஸஅத் (ரலி) வந்த போது, உங்களது தலைவருக்கு கண்ணியம் அளிக்கும் விதமாக எழுந்து நில்லுங்கள் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் மக்களிடம் கூறினார்கள். இன்னோர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது: உங்களில் சிறந்த மனிதருக்காக எழுந்து நில்லுங்கள் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் மக்களிடம், கூறினார்கள்

அவ்ஸ் கோத்திரத்தின் தரப்பிலிருந்து பனூ குறைழாவிற்காக பரிந்துரை செய்யப்பட்டதை செவியுற்றபோது ஹஸ்ரத் ஸஅத் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: இப்போது தான் அல்லாஹ்வின் விஷயத்தில் பழிப்பவர்களின் பழிப்பை பொருட்படுத்தாமல் இருக்க இந்த ஸஅதுக்கு நேரம் வந்துள்ளது

பனூ குறைழா தொடர்பாக ஹஸ்ரத் ஸஅத் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் அவர்கள் தொடர்பாக இந்த தீர்ப்பை வழங்குகின்றேன்: அதாவது, அவர்களுடைய பருவ வயதை அடைந்த ஆண்கள் கொல்லப்பட வேண்டும் ; அவர்களின் பெண்களும், குழந்தைகளும் கைது செய்யப்பட வேண்டும் ;அவர்களின் செல்வம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் ; அவர்களின் வீடுகள் முஹாஜிர்களுக்கு கொடுக்கப்பட வேண்டும். அன்ஸாருக்கு கொடுக்கப்படக் கூடாது

இதைக் கேட்ட பெருமானார் (ஸல்) அவர்கள், ஸஅதே! உங்களுடைய தீர்ப்பு ஏழு வானங்களுக்கு மேலிருக்கும் அல்லாஹ் வழங்கிய தீர்ப்பை போன்று இருக்கின்றது என்று கூறினார்கள்

ஓர் அறிவிப்பில் வருகிறது: ஹஸ்ரத் ஸஅத் (ரலி) அவர்களின் தீர்ப்பைக் குறித்து பெருமானார் (ஸல்) அவர்கள் கூறும் போது, இந்த தீர்ப்பை குறித்து வானவர்கள் எனக்கு ஸஹ்ரீ நேரத்தில் கூறியிருந்தார்கள் என்றார்கள்

---

## ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 25 அக்டோபர் 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1403 ஆண்டு **அகா** மாதம் **25 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ۝
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝

**சென்ற இதழின் தொடர்ச்சி...........**

அங்கிருந்து எழும்போது பனூ குறைழா உடைய ஆண்களையும், பெண்கள் மற்றும் பிள்ளைகளையும் தனித்தனியாக பிரிக்குமாறு அன்னார் (ஸல்) கட்டளையிட்டார்கள். ஆகவே இரு குழுக்களாக தனித்தனியாக அவர்கள் பிரிக்கப்பட்டு மதீனாவுக்குக் கொண்டு வரப்பட்டார்கள். நகருக்குள் இரு வெவ்வேறு கட்டடத்தில் அவர்கள் தங்க வைக்கப்பட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்களின் கட்டளையின் காரணமாக ஸஹாபிகளில் பல பேர் தாம் பசியோடு இருந்து கொண்டு பனூ குறைழாவுக்காக குவியில் குவியலாக பழங்களைக் கொண்டு வந்து கொடுத்தார்கள். அந்த யூதர்கள் இரவு முழுவதும் பழங்களை உண்பதில் மூழ்கி இருந்தார்கள் என்றும் எழுதப்பட்டுள்ளது.

காலை விடிந்த போது மதீனாவின் ஒரு கடைவீதியில் குழி தோண்டுமாறு கட்டளை இடப்பட்டது. அபூ ஜஹ்ம் அத்வீ அவர்களின் வீட்டிலிருந்து அஜாருஸ் ஸைது வரை தோண்டப்பட்டது. பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் வருகை தந்தார்கள். அன்னாருடன் சில ஸஹாபிகளும் வந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் பனூ குறைழா உடைய ஆண்களை அழைத்தார்கள். அவர்கள் குழுக்களாக பிரிக்கப்பட்டு அந்தக் குழிக்குள் கொல்லப்பட்டார்கள். கொண்டு செல்லப்படும் போது அவர்கள் கஅப் பின் அஸதிடம், முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள்? என்பது பற்றி உங்களுக்கு தெரியுமா? என்று கேட்டார்கள். அதாவது ஒருவர் அவரிடம் இதைக் கேட்டார். அதற்கு அவர், உங்களுக்கு எது தீங்கோ அதை அவர் செய்யப் போகிறார் ; அது உங்களுக்கு நல்லதாக இருக்காது. உங்கள் மீது அழிவுதான். உங்களுக்கு எந்நிலையிலும் புரிவதில்லை. அழைக்கக்கக் கூடியவன் விடுவதில்லை ; செல்லக் கூடியவர் திரும்ப வருவதில்லை. அல்லாஹ்வின் மீது ஆணையாக! செல்லக் கூடியவருக்காக வாள் காத்திருக்கின்றது என்று கூறினார். அதாவது இப்பொழுது கோபப்படக் கூடிய நேரம் கிடையாது. நாங்கள் உங்களுடைய ஆலோசனையை ஒப்புக் கொண்டிருந்தால், நமக்கும் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கும் இடையில் ஏற்பட்டிருந்த அந்த உடன்படிக்கையை நாங்கள் முறித்திருக்க மாட்டோம் என்று கூறினார்கள். இப்போது இந்த பழிச் சொற்களை விட்டு விடுங்கள். இப்போது உங்களை விட்டு எதுவும் விலக்கப்படாது. இப்போது வாளுக்காக காத்திருங்கள் என்று ஹுயய் பின் அக்தப் கூறினான்.ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களும் ஹஸ்ரத் ஸுபைர் பின் அவ்வாம் (ரலி) அவர்களும் யூதர்களை கொலை செய்வதற்காக நியமிக்கப்பட்டிருந்தார்கள். கொல்லப்படுவதற்காக கைதிகள் ஸஹாபிகளுக்கு மத்தியில் பங்கிட்டு கொடுக்கப்பட்டிருந்தார்கள் என்றும் சில அறிவிப்புகளில் உள்ளது.

இதற்கான விபரத்தை ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதி இருக்கின்றார்கள்:

அடுத்த நாள் காலையில் ஹஸ்ரத் ஸஅத் பின் முஆஸ் (ரலி) அவர்களின் தீர்ப்பு அமல்படுத்தப்பட இருந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் தகுதியான சில நபர்களை அந்த வேலைக்காக நியமித்து இருந்தார்கள். மேலும் அன்னாரும் அருகிலேயே ஓரிடத்தில் அமர்ந்திருந்தார்கள். ஏனெனில், தீர்ப்பை செயல்படுத்தும்போது அன்னாருடைய வழிகாட்டலுடைய அவசியம் ஏற்பட்டால் தாமதிக்காமல் வழிகாட்டல் கொடுப்பதற்காக அன்னார் (ஸல்) அங்கேயே இருந்தார்கள். அத்துடன் ஏதேனும் ஒரு குற்றவாளி தொடர்பாக எவராவது ஒருவர் கருணைக்காக மேல் முறையீடு செய்தால் உடனடியாக தீர்ப்பு கொடுப்பதற்காகவும் அன்னார் (ஸல்) அங்கே இருந்தார்கள். ஹஸ்ரத் ஸஅத் பின் முஆஸ் (ரலி) அவர்களுடைய தீர்ப்பின் மேல்முறையீடு நீதிமன்ற வழிமுறைப்படி அன்னாருக்கு முன்னால் எடுத்து வைக்கப்பட முடியாததுதான். ஆனால் ஓர் அரசர் அல்லது ஓர் அதிபர் என்ற முறையில் ஒரு நபரைக் குறித்து குறிப்பிட்ட காரணத்தை அடிப்படையாக வைத்து கருணைக்கான மேல்முறையீடு வரும்போது, அதை அன்னாரால் பரிசீலிக்க முடியும். அன்னாரிடம் காணப்பட்ட கருணை எப்படிப்பட்டதாக இருந்தது என்றால், குற்றவாளிகள் தனித்தனியாக கொண்டு செல்லப்பட வேண்டும் என்றும் கட்டளையிட்டிருந்தார்கள். அதாவது ஒருவர் கொல்லப்படும்போது, இன்னொரு குற்றவாளி அருகில் இருக்கக் கூடாது என்று கூறியிருந்தார்கள். ஆகவே ஒவ்வொரு குற்றவாளியும் தனித்தனியாக கொண்டு செல்லப்பட்டு ஹஸ்ரத் ஸஅத் பின் முஆஸ் (ரலி) அவர்களுடைய தீர்ப்புக்கு இணங்க அவர் கொல்லப்பட்டார்.

பனூ நழீர் கோத்திரத்தின் தலைவனான ஹூயய் பின் அக்தப் வந்த போது அவன், பெருமானார் (ஸல்) அவர்களை பார்த்து, முஹம்மதே, உங்களை ஏன் எதிர்த்தேன் என்பதில் எனக்கு வருத்தம் இல்லை; ஆனால், விஷயம் என்னவென்றால், எவர் இறைவனை விட்டு விடுவாரோ அவரை இறைவனும் விட்டு விடுவான் என்று கூறிவிட்டு பிறகு மக்களை பார்த்து, இறை கட்டளைக்கு முன்னால் எந்த விதிவிலக்கும் கிடையாது; இது அவனுடைய கட்டளையும், அவனுடைய விதியும் ஆகும் என்று கூறினான். அதேபோன்று பனூ குறைழா உடைய தலைவனான கஅப் பின் அஸது கொல்லப்படுவதற்காக கொண்டு வரப்பட்டபோது, பெருமானார் (ஸல்) அவர்கள் முஸ்லிமாகிவிடுவாறு அவருக்கு சூசகமாக கூறினார்கள். அதற்கு, அவர் அபூ காஸிமே! நான் முஸ்லிமாகி இருப்பேன்தான். ஆனால் மரணத்திற்கு அஞ்சி நான் முஸ்லிமாகி விட்டேன் என்று மக்கள் கூறுவார்கள். ஆகவே என்னை யூத மார்க்கத்திலேயே மரணிக்க விட்டு விடுங்கள் என்று கூறினார்.

ரிஃபாஆ எனும் ஓர் யூதருடைய மன்னிப்பைக் குறித்தும் குறிப்பு காணப்படுகிறது. இதைக் குறித்து ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்: ரிஃபாஆ எனும் பெயர் கொண்ட ஓர் யூதர் இருந்தார். அவர் கருணை உள்ளம் கொண்ட ஒரு முஸ்லிம் பெண்ணிடத்தில் மன்றாடி அந்தப் பெண்மணியை தமக்காக பரிந்துரை செய்வதற்காக முன்னிறுத்தினார். அந்த முஸ்லிம் பெண்மணி பரிந்துரை செய்ததன் காரணமாக பெருமானார் (ஸல்) அவர்கள் ரிஃபாஆவை மன்னித்து விட்டார்கள். சுருக்கமாக, அந்நேரத்தில், யாருடைய பரிந்துரையும் அன்னாரிடத்தில் வந்தாலும் அன்னார் (ஸல்) உடனே மன்னித்து வந்தார்கள். ஸஅது (ரலி) அவர்கள் வழங்கிய தீர்ப்பின் காரணமாக அன்னார் (ஸல்) கட்டாயத்திற்கு ஆளாகி இருந்தார்கள் என்பது இதிலிருந்து தெரிய வருகிறது. மற்றபடி, யூதர்கள் கொலை செய்யப்பட வேண்டும் என்பதன் பக்கம் அன்னாருடைய உள்ளம் ஈர்க்கப்பட்டிருக்கவில்லை என்பதற்கு இது சான்றாகும்.

பெருமானார் (ஸல்) அவர்கள் யூதர்கள் மீது அநீதி இழைத்தார்கள் என்று கூறப்படுகிறது.அவதூறுக்கு இது தெளிவான பதிலாகும்.

மேற்கூறப்பட்ட முறையில் இவ்வாறு பனூ குறைழா உடைய ஆண்கள் கொல்லப்பட்டுக் கொண்டிருந்தார்கள். எந்த அளவுக்கு என்றால், பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த தண்டனை முடியும் வரை அங்கு இருந்தார்கள். சூரிய ஒளி மறையும் வரை அவர்கள் கொல்லப்பட்டுக் கொணடிருந்தார்கள். பிறகு மண் இட்டு அந்தக் குழிகள் மூடப்பட்டன. இவை அனைத்தும் ஹஸ்ரத் ஸஅத் பின் முஆஸ் (ரலி) அவர்களின் கண்களுக்கு முன்னால் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருந்தன. அல்லாஹ் ஹஸ்ரத் ஸஅத் பின் முஆஸ் (ரலி) அவர்களின் துஆவை ஏற்றுக் கொண்டு அவர்களின் கண்களுக்கு குளிர்ச்சியை வழங்கினான். வரலாற்று ரீதியிலான அறிவிப்பின் அடிப்படையில் பார்க்கும்போது, பெண்களுள் நுபா(த்) தா எனும் ஒரு பெண் மட்டுமே கொல்லப்பட்டாள். அவள் பனூ குறைழா உடைய ஹகம் எனும் ஒருவனின் மனைவி ஆவாள். ஹஸ்ரத் கல்லாத் (ரலி) எனும் ஒரு பெண் ஸஹாபி பனூ குறைழா உடைய கோட்டைச் சுவருக்கு அருகில் அமர்ந்திருந்தார். அந்தப் பெண் மேலிருந்து பாறையை எறிந்து அந்த ஸஹாபியைக் கொன்று விட்டாள். அந்தக் கொலைக்கு தண்டனையாக அந்தப் பெண் கொலை செய்யப்பட்டாள். ஆனால், சில வரலாற்று ஆசிரியர்கள் இந்த அறிவிப்பை ஏற்றுக் கொள்வது கிடையாது. அவர்களைப் பொறுத்தவரை பனூ நஸீர் அல்லது கைபருடைய சில அறிவிப்புகள் இந்த சம்பவத்துடன் கலந்து விட்டதன் காரணமாகவும், வேறு சில காரணங்களின் காரணமாகவும் அந்தப் பெண் கொல்லப்பட்ட சம்பவம் உண்மையில்லை என்று கூறுகிறார்கள். அல்லாஹ்வே நன்கறிவான்.

ரீஹானா பின்த் ஸைது நஸரியா எனும் பெண்மணியை பற்றிய குறிப்பு காணக்கிடைக்கின்றது. பனூ குறைழா உடைய பெண் கைதிகளும், பிள்ளைகளும் மதீனாவில் முஸ்லிம்களுக்கு இடையே பங்கிட்டு கொடுக்கப்பட்டார்கள். அவர்களுள் பனூ நழீரைச் சேர்ந்த ரீஹானா பின்த் ஸைது என்ற ஒரு பெண்ணும் இருந்தாள். அவள் பனூ குறைழாவைச் சார்ந்த ஹகம் எனும் ஒரு நபரை திருமணம் செய்திருந்தாள். பெருமானார் (ஸல்) அவர்கள் அந்தப் பெண்ணை தமக்காக தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். சிலரைப் பொருத்த வரை அந்தப் பெண் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டாள் என்றும், சிலரைப் பொருத்த வரை பெருமானார் (ஸல்) அவர்கள் அந்தப் பெண்ணை அடிமைப் பெண்ணாக வைத்திருந்தார்கள் என்றும், சிலரைப் பொருத்தவரை பெருமானார் (ஸல்) அவர்கள் அப்பெண்ணை திருமணம் புரிந்தார்கள் என்றும் கூறப்படுகின்றது.

பல்வேறு வகையான அறிவிப்புகள் உள்ளன. எது சரி? எது தவறு? என்று அடுத்து வருகின்ற விளக்கத்தில் புரிய முடிகின்றது. இந்த அறிவிப்புகளை ஆய்வு செய்து பார்க்கும்போது வரலாற்று ஆசிரியர்களுக்கு இதில் ஏற்பட்ட தவறு என்னவென்றால், முதல் விஷயம் இந்த அறிவிப்புகள் சம்பவத்திற்கு மாற்றமானதாகவும், இட்டுக்கட்டப்பட்டவையாகவும் உள்ளன. அதில் ஏதேனும் உண்மை இருக்கும் என்றால், பெருமானார் (ஸல்) அவர்கள் அந்தப் பெண்மணியை விடுதலை செய்து விட்டார்கள் என்பதும், அந்தப் பெண்மணி தம் பெற்றோருடைய வீட்டுக்குச் சென்று அங்கேயே மரணமடைந்தாள் என்ற அளவுக்கு மட்டுமே ஆகும்.ஒரு வாதத்திற்காக இந்த அறிவிப்புகளை சரியானது என்று ஏற்றுக் கொண்டாலும், பெருமானார் (ஸல்) அவர்கள் அந்தப் பெண்ணை திருமணம் செய்தார்கள் என்ற அளவுக்கு மட்டுமே ஏற்றுக் கொள்ள வேண்டியது வரும். அன்னார் (ஸல்) அப்பெண்ணை அடிமைப் பெண்ணாக ஒருபோதும் வைத்திருக்க மாட்டார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் ரீஹானா தொடர்பான தவறான தகவல் என்ற தலைப்பின் கீழ் இதன் விளக்கத்தை இவ்வாறு எழுதி இருக்கிறார்கள்.

பனூ குறைழா உடைய கைதிகளுள் ரீஹானா என்ற ஒரு பெண்ணும் இருந்தாள். பெருமானார் (ஸல்) அவர்கள் அந்தப் பெண்ணை அடிமைப் பெண் ஆக தம்மிடத்தில் வைத்துக் கொண்டார்கள் என்று சில வரலாற்று ஆசிரியர்கள் எழுதியிருக்கின்றார்கள். இந்த அறிவிப்பின் அடிப்படையில் சர் வில்லியம் முயர் என்பவர் இந்த சந்தர்ப்பத்தில் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு எதிராக மிகவும் உள்ளத்தை புண்படுத்தும் வகையில் ஏளனம் செய்து இருக்கிறார். ஆனால், உண்மை என்னவென்றால், இந்த அறிவிப்பு முற்றிலும் தவறானதும், அடிப்படையற்றதும் ஆகும். முதல் விஷயம் என்னவென்றால், ஸஹீஹ் புஹாரியில் பெருமானார் (ஸல்) அவர்கள் பனூ குறைழா உடைய கைதிகளை ஸஹாபிகளுக்கு மத்தியில் பங்கிட்டு கொடுத்தது பற்றிய குறிப்பு உள்ளது. அந்த அறிவிப்பு இதை தவறு என்று நிரூபிக்கின்றது. ஏனெனில், பெருமானார் (ஸல்) அவர்கள் ஏதேனும் பெண் கைதியை தம்முடைய வீட்டுக்காக தனியாக ஆக்கி இருப்பார்கள் என்றால் இயல்பாக இந்த சந்தர்ப்பத்தில் புஹாரியுடைய அறிவிப்பில் அது பற்றிய குறிப்பு இருந்திருக்க வேண்டும். ஆனால் புஹாரியில் அதைப் பற்றி எந்த சுவடும் கிடையாது. அத்துடன் மற்ற அறிவிப்புகளை பார்க்கும்போது பெருமானார் (ஸல்) அவர்கள் கருணை புரிந்து விடுவித்த கைதிகளில் ரீஹானாவும் இருந்தார் என்று நிரூபணம் ஆகின்றது. அதற்குப் பிறகு ரீஹானா மதீனாவை விட்டு புறப்பட்டுச் சென்று தம் பெற்றோர்களின் குடும்பமான பனூ நழீருக்கு சென்று விட்டாள். பிறகு அவள் அங்கேதான் இருந்தார். இஸ்லாத்தின் மிகப் புகழ்ப் பெற்ற ஆராய்ச்சியாளர்களில் ஒருவரான அல்லாமா இப்னு ஹஜர் அவர்களும் இந்த அறிவிப்பை சரியானது என்று கூறியிருக்கின்றார்கள். ரீஹானாவை பெருமானார் (ஸல்) அவர்கள் தம் பராமரிப்பில் எடுத்துக் கொண்டார்கள் என்று நாம் ஏற்றுக் கொண்டாலும் அப்பொழுதும் கூட நிச்சயமாக அவள் அன்னாருடைய மனைவியாகத்தான் இருந்திருப்பார்; அடிமைப் பெண்ணாக இருந்திருக்க மாட்டாள். பெருமானார் (ஸல்) அவர்கள் அந்தப் பெண்ணை தம் பராமரிப்பில் வைத்துக் கொண்டார்கள் என்று கூறப்பட்டிருக்கின்ற விஷயத்தை எந்த வரலாற்று ஆசிரியர்கள் அறிவித்திருக்கிறார்களோ அவர்களில் பெரும்பாலார் அந்தப் பெண்மணியை பெருமானார் (ஸல்) அவர்கள் விடுதலை செய்து திருமணம் செய்தார்கள் என்றும் அதனுடன் எழுதி இருக்கிறார்கள். உதாரணமாக, பெருமானார் (ஸல்) அவர்கள் தன்னை விடுதலை செய்து விட்டார்கள் என்றும் பிறகு தான் முஸ்லிமான பிறகு தன்னை திருமணம் செய்து கொண்டார்கள் என்றும் தன்னுடைய மஹர் தொகையாக 12 அவ்கியா 40 திர்ஹம் நிர்ணயிக்கப்பட்டது என்றும் ரீஹானா கூறியதாக இப்னு ஸஅது அவர்கள் அறிவித்துள்ளார்கள். இந்த அறிவிப்புக்கு எதிராக சர்வில்லியம் முயர் எந்த அறிவிப்பை அடிப்படையாக எடுத்துக் கொண்டாரோ அந்த அறிவிப்பை இப்னு ஸஅத் அவர்கள் முற்றிலும் தவறு என்றும், உண்மைக்கு புறம்பானது என்றும் கூறியிருக்கின்றார்கள்.

மற்றபடி இது சந்தேகத்திற்குரிய அறிவிப்பாக இருக்கின்றது.

இதுவே அறிவு படைத்தோரின் ஆய்வாக இருக்கின்றது என்றும் எழுதப்பட்டுள்ளது.

சுருக்கம் என்னவென்றால், முதல் விஷயம் புஹாரியுடைய அறிவிப்பிலிருந்து சான்று கிடைப்பது போன்று ஸஹாபிகளால் ஒப்புக் கொள்ளப்பட்டது போன்று பெருமானார் (ஸல்) அவர்கள் ரீஹானாவை தம் பராமரிப்பில் எடுத்துக் கொள்ளவே இல்லை. மாறாக அவளை விடுதலை செய்து

விட்டார்கள். அதற்குப் பிறகு அவள் தம் குடும்பத்துடன் சேர்ந்து கொண்டாள். இரண்டாவது விஷயம், பெருமானார் (ஸல்) அவர்கள் அவரை விடுதலை செய்து விட்டார்கள். அதற்குப் பிறகு அவள் தம் குடும்பத்துடன் சேர்ந்து கொண்டாள். மூன்றாவது விஷயம், பெருமானார் (ஸல்) அவர்கள் அவரை தம் பராமரிப்பில் வைத்துக் கொண்டார்கள் என்ற அறிவிப்பை ஒப்புக் கொண்டாலும் கூட அன்னார் (ஸல்) அவளை விடுதலை செய்து அவளுடன் திருமணம் செய்து கொண்டார்களேயன்றி அவளை அடிமைப் பெண்ணாக வைத்திருக்கவில்லை. அவள் கூறியதாக சிலர் எடுத்துரைத்துள்ள அறிவிப்பும் அவ்வாறுதான் உள்ளது. அது எந்த அளவு சரியானது என்பதை அல்லாஹ்வே நன்கறிவான்.

இத்துடன் இன்னொரு விஷயத்தையும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அது என்னவென்றால், ரீஹானா உடைய பெயர், குடும்பம், கோத்திரம் போன்றவை தொடர்பாக அறிவிப்புகளில் எந்த அளவு கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றனவென்றால், அப்படி ஒரு பெண் இருந்தாளா? என்ற சந்தேகம் எழுகிறது. குறிப்பாக அவள் எப்படிப்பட்ட ஒருவருடைய மனைவியாக சித்தரிக்கப்படுகிறாள் என்றால், அந்த நபர் நிச்சயமாக உலக அளவில் மிகவும் வரலாற்று சிறப்பு மிக்க மனிதராக திகழும்போது இந்த சந்தேகம் அறிவுக்கு புறம்பானதாக தெரியவில்லை. அல்லாஹ்வே நன்கறிவான்.

போர்ச் செல்வம் பங்கிட்டு கொடுக்கப்பட்டது தொடர்பாக இவ்வாறு விளக்கம் காணப்படுகிறது. போர்ச் செல்வம் ஒன்று சேர்க்கப்பட்ட போது பெருமானார் (ஸல்) அவர்கள் பேரீத்தம் பழங்களை பங்கிட்டார்கள். அந்தப் போரில் 36 குதிரைகள் இருந்தன. ஒரு குதிரைக்கு இரண்டு பங்கு; குதிரை வீரருக்கு ஒரு பங்கு. காலாப்படை வீரருக்கு ஒரு பங்கு. ஓராயிரம் பெண்களும், பிள்ளைகளும் கைதியாக இருந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் போர்ச் செல்வத்தை பங்கிட்டு கொடுப்பதற்கு முன்னர் அதனுடைய ஐந்தில் ஒரு பகுதியை எடுத்து வைத்துக் கொள்வார்கள். கைதிகளை ஐந்து பங்காக பங்கிட்டார்கள். ஐந்தில் ஒரு பகுதியை வைத்துக் கொண்டார்கள். அன்னார் (ஸல்) அவர்களில், சிலரை விடுதலை செய்தார்கள்; சிலரை அன்பளிப்பாக கொடுத்தார்கள். சிலரை பணியாளர்களாக வைத்துக் கொண்டார்கள். அதேபோன்று பேரீத்தம் பழங்களில் ஐந்தில் ஒரு பகுதியை வைத்துக் கொண்டார்கள். ஒவ்வொரு பொருளிலிருந்தும் ஐந்தில் ஒரு பகுதியை பிரித்து எடுத்துக் கொண்டார்கள். ஒவ்வொரு பொருளுக்கும் சீட்டு குலுக்கிப் போட்டு பார்ப்பார்கள். அந்த சீட்டு குழுக்களில் என்ன பங்கு வருகின்றதோ அதை அன்னார் (ஸல்) எடுத்துக் கொள்வார்கள். ஹஸ்ரத் மஹ்மியா பின் ஜசஃ ஸுபைதீ (ரலி) அவர்களை ஐந்தாம் பங்குக்கு கண்காணிப்பாளராக நியமித்தார்கள். மீதமுள்ள நான்கு பங்குகளையும் பங்கிட்டுக் கொடுத்தார்கள். அதேபோன்று, பெருமானார் (ஸல்) அவர்கள் போரில் கலந்து கொண்ட பெண்களுக்கும் அவர்களுக்கான பங்கை வழங்கினார்கள். அந்த பெண்களுள் ஹஸ்ரத் ஸஃபிய்யா பின்த் அப்தில் முத்தலிப் (ரலி), ஹஸ்ரத் உம்மு அம்மாரா (ரலி), ஹஸ்ரத் உம்மு ஸலீத் (ரலி), ஹஸ்ரத் உம்மு அலாஆ அன்ஸாரியா (ரலி), ஹஸ்ரத் ஸுமைரா பின்த் கைஸ் (ரலி), ஹஸ்ரத் உம்மு ஸஅத் பின் முஆஸ் (ரலி), ஹஸ்ரத் கப்ஷா பின்த் ராஃபி (ரலி) ஆகியோரும் இருந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸஅத் பின் உபாதா (ரலி) அவர்களுடன் ஒரு குழுவை அனுப்பி வைத்து ஐந்தில் ஒரு பங்காக கிடைத்த செல்வத்தை அதாவது கைதிகள் போன்றோரை விற்பதற்காக சிரியாவை நோக்கி அனுப்பி வைத்தார்கள். அதற்கு பதிலாக ஆயுதங்களும், குதிரைகளும் வாங்குவதற்காக அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்களும், ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களும் அதில் ஒரு பகுதியை வாங்கிக் கொண்டனர் என்றும் ஓர் அறிவிப்பில் காணப்படுகிறது. அந்தக் கைதிகள் அனைவரும் மதீனாவில்தான் வைக்கப்பட்டார்கள். எங்கும் அனுப்பப்படவில்லை என்றும், பிறகு அவர்களை கொஞ்சம் கொஞ்சமாக பெருமானார் (ஸல்) அவர்கள் விடுதலை செய்து கொண்டே இருந்தார்கள் என்றும் ஒரு கருத்து காணப்படுகிறது.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் பல்வேறு வரலாற்று நூல்களில் தாம் மேற்கொண்ட ஆய்வை அடிப்படையாக வைத்து பின்வருமாறு எழுதுகிறார்கள்:

ஹஸ்ரத் ஸஅத் பின் முஆஸ் (ரலி) அவர்களுடைய தீர்ப்புக்கிணங்க கைது செய்யப்பட்ட பெண்களைக் குறித்தும் சில அறிவிப்புகளில் இருந்து தெரிய வருவது என்னவென்றால், பெருமானார் (ஸல்) அவர்கள் அம்மக்களை நஜதை நோக்கி அனுப்பி வைத்தார்கள்; அங்கிருந்த சில நஜத் கோத்திரங்கள் ஃபித்யா செலுத்தி அவர்களை விடுவித்துக் கொண்டன. அந்தத் தொகையின் மூலமாக முஸ்லிம்கள் போருக்குத் தேவையான குதிரைகளையும், ஆயுதங்களையும் வாங்கிக் கொண்டார்கள் என்று கூறப்பட்டுள்ளது. அவ்வாறு நிகழ்ந்திருக்கவும் வாய்ப்பு உள்ளது. ஏனெனில், நஜதுடைய கோத்திரங்களும் பனூ குறைழாவுக்கும் இடையில் நட்பு இருந்தது. பனூ குறைழா போருக்கு சில நாட்கள் முன்புதான் அகழ்ப் போரில் முஸ்லிம்களுக்கு எதிராக அவர்கள் ஒன்று சேர்ந்து போரிட்டிருந்தார்கள். உண்மை என்னவென்றால், நஜது வாசிகளுடைய தூண்டுதலின் காரணமாகவே பனூ குறைழா பெருமானார் (ஸல்) அவர்களுக்கு எதிராக கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தது. ஆகவே நஜது வாசிகள் தம் நட்புக் கோத்திரமான பனூ குறைழா உடைய கைதிகளை முஸ்லிம்களின் கைகளில் இருந்து விடுவித்தார்கள் என்றால் அதில் எந்த வியப்பும் இல்லை. ஆனால், சரியான அறிவிப்புகளில் இருந்து தெரிய வருவது என்னவென்றால், அந்தக் கைதிகள் மதீனாவில்தான் இருந்தார்கள்; எங்கும் செல்லவில்லை என்று தெரிய வருகின்றது. பெருமானார் (ஸல்) அவர்கள் அந்தக் கைதிகளை வழக்கம்போல் பல்வேறு ஸஹாபிகளின் கண்காணிப்பின் கீழ் பங்கிட்டுக் கொடுத்திருந்தார்கள். அந்தக் கைதிகளில் சிலர் தம்முடைய ஃபித்யாவை செலுத்தி விடுதலை வாங்கிக் கொண்டனர். சிலரை பெருமானார் (ஸல்) அவர்களே கருணை காட்டி விடுவித்து விட்டார்கள். இந்த மக்கள் பிறகு கொஞ்சம் கொஞ்சமாக மனமுவந்து முஸ்லிம்களாகி விட்டனர். உதாரணமாக, அப்படிப்பட்டவர்களுள் அதிய்யா குர்ழீ, அப்துர் ரஹ்மான் பின் ஸுபைர் பின் பாத்தியா, கஅப் பின் ஸுலைம், முஹம்மது பின் கஅப் ஆகியோருடைய பெயர்கள் வரலாற்றில் பாதுகாக்கப்பட்டுள்ளன. இவர்கள் அனைவரும் முஸ்லிம்களாகி விட்டனர். இறுதியாக கூறப்பட்ட முஹம்மது பின் கஅப் என்பவர் மிகப் பெரிய இஸ்லாமிய சான்றோராக திகழ்ந்தார்கள் என்பதும் தெரிய வருகிறது.

கைதியாக இருந்த பெண்கள் பங்கிட்டு கொடுக்கப்பட்டிருந்தாலும் சரி அல்லது விற்கப்பட்டிருந்தாலும் சரி; அந்த சந்தர்ப்பத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த பெண்களுக்காக எப்படிப்பட்ட ஒரு கட்டளையை பிறப்பித்தார்கள் என்றால் அது அன்னாருடைய கருணை உள்ளத்தையும், பெண்களுக்காக அன்னார் (ஸல்) எந்த அளவு கருணையின் உருவாக திகழ்ந்தார்கள் என்பதையும் காட்டுகின்ற அதே வேளையில் பொன்னெழுத்துக்களால் எழுதுவதற்கு தகுதி படைத்தாகவும் இருக்கிறது. எந்தவொரு பெண்ணும் பங்கிட்டுக் கொடுக்கப்பட்டாலும் சரி ; அல்லது விற்கப்பட்டாலும் சரி; அந்தப் பெண்ணுடன் சிறு வயது ஆண் குழந்தையோ அல்லது சிறு வயது பெண் குழந்தையோ இருக்கும் என்றால் அந்தக் குழந்தையை தாயை விட்டு பிரிக்கக் கூடாது. அந்தக் குழந்தை பருவ வயதை அடையும் வரை தாயுடன்தான் இருக்க வேண்டும். அதேபோன்று சிறு வயதுடைய இரு சகோதரிகள் இருப்பார்கள் என்றால், அவர்கள் பருவ வயதை அடையும் வரை அவர்களையும் பிரிக்கக் கூடாது என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். இதுதான் அகில உலகங்களுக்கும் அருட்கொடையாக இருந்த அன்னாருடைய செயலாகும். இதுதான் அன்னார் (ஸல்) பெண்கள் மீதும், கைதிகள் மீதும் தம்முடைய எதிராளிகள் மீதும் காட்டிய கருணை ஆகும். ஆனால், தற்போது முஸ்லிம்களுடைய நிலை எவ்வாறு உள்ளது என்று பாருங்கள்! அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதரின் பெயரால் மக்களை வீடுகளை விட்டு வெளியேற்றுகின்றார்கள்; வீடற்றவர்களாக ஆக்கிக் கொண்டிருக்கின்றனர்; கொலை செய்கிறார்கள். பிறகு இதன் விளைவு எப்படி வெளிப்படுகிறது? என்றால் முஸ்லிம்களின் கண்ணியம் குறைந்து கொண்டே செல்கிறது. அல்லாஹ் அந்த முஸ்லிம்களுக்கு அறிவையும் புரியும், திறனையும் வழங்குவானாக!

தமிழாக்கம்
மவ்லவி APA தாரிக் அஹ்மத்

* * * * * * * *

A. SAMSUL ALAM
A. ABDUL RAHIM

Dealers of Natural Precious & Semi-Precious Gemstones

TOONICE
DEALERS OF PRECIOUS & SEMI-PRECIOUS GEMSTONES
No. 100/59-A, 1st Floor, South Thaikkat Street Melapalayam, Tirunelveli-627005 Tamil Nadu, India
+91 9659389953 toonicegems@gmail.com

Al-Nida GEMS
No. 1/B3, 1st Floor Village Road Balaji Nagar Extension Puzhuthivakkam, Chennai-600091 Tamil Nadu, India
+91 9042150339 alnidagems@gmail.com

HG GEMS
HANIYAHANA GEMS CO., LTD.
No. 191/16, Soi Puttha Osot Siphraya, Bangrak Bangkok - 10500 Thailand
+66 638751327 gemscertify22@gmail.com

நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்
தொலைபேசி எண் : 1800 103 2131
இந்த TOLL FREE எண்ணில்
∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.
தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது**
**ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்களின் ஐரோப்பிய சுற்றுப் பயணம் - ஜெர்மனி 2012
அறிக்கை : அப்துல் மாஜித் தாஹிர், இன்டர்நேஷனல் வகீலுத் தப்ஷீர் லண்டன்

எனக்கு நிகழ்ச்சி மிகவும் பிடித்திருந்தது. மிகவும் சிறப்பான ஏற்பாடாக இருந்தது. கலீஃபா ஆற்றிய உரை ஒன்றும் எழுதி வைத்து ஆற்றிய உரை கிடையாது. மாறாக, அன்னாரின் உள்ளத்தின் எண்ணங்களாக இருந்தன. கலீஃபா அவர்கள் மாணவர்களிடம் கூறியது மிகவும் அவசியமான மற்றும் ஆக்கப்பூர்வமான விஷயமாகும் ( ஒரு ஜெர்மன் விருந்தினர்)

நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள், ஜாமிஆவின் கட்டடம் மற்றும் கலீஃபா அவர்களின் உரை ஆகியவற்றால் நான் மிகுந்த தாக்கத்திற்குள்ளாகி விட்டேன் - ( ஒரு ஜெர்மன் விருந்தினர்)

உங்களுடைய உலகளாவியத் தலைவரின் சொற்பொழிவு என்னைப் பொருத்த வரை மிகவும் செறிவு மிக்கதாகவும், பயனுள்ளதாகவும் இருந்தது. அன்னாருடைய வாழ்வளிக்கும் சொற்கள் அடிப்படை நல்லொழுக்கங்களை மட்டுமே உள்ளடக்கியதாக இருக்கவில்லை.மாறாக, என் மீது ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தி விட்டன. ( ஒரு ஜெர்மன் விருந்தினர்)

சமூகத்தில் மத நல்லிணக்கத்தையும், அமைதியையும் பரப்ப வேண்டும் என்பது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் முக்கிய நிபந்தனைகளில் ஒன்றாகும் ( ஜெர்மன் பத்திரிகை)

## ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் ஜெர்மனி ஜாமிஆ அஹ்மதிய்யாவின் திறப்பு விழாவின் போது ஆற்றிய உரை குறித்த விருந்தினர்களின் தாக்கங்கள்

ஜாமிஆ அஹ்மதிய்யா ஜெர்மனியின் திறப்பு விழா மற்றும் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் உரை குறித்து சில விருந்தினர்கள் தமது தாக்கங்களை வெளிப்படுத்தினார்கள். இதே போன்று ஜெர்மனியின் எலக்ட்ரானிக் மீடியா மற்றும் அச்சு ஊடகங்களும் இந்த நிகழ்ச்சியை கவரேஜ் செய்தன.

ரைடர்ஷெட் நகரத்தின் மேயர் வெர்னர் ஆமன்ட்(Werner Amend) அவர்கள் தமது தாக்கத்தை எடுத்துரைத்தவாறு கூறினார்கள்: எனக்கு நிகழ்ச்சி மிகவும் பிடித்திருந்தது. மிகவும் சிறப்பான ஏற்பாடாக இருந்தது. கலீஃபா ஆற்றிய உரை ஒன்றும் எழுதி வைத்து ஆற்றிய உரை கிடையாது. மாறாக, அன்னாரின் உள்ளத்தின் எண்ணங்களாக இருந்தன. நீங்கள் போதனையின் படி செயலாற்றுங்கள்; மேலும் மக்களுக்கு முன்னால் உங்களது செயல் முன்மாதிரியை வெளிப்படுத்துங்கள் என்று கலீஃபா அவர்கள் மாணவர்களிடம் கூறியது மிகவும் அவசியமான மற்றும் ஆக்கப்பூர்வமான விஷயமாகும்.ஒரு மத அமைப்பின் தலைவராக இருந்த போதிலும் மிகவும் செயல்முறை ரீதியிலான மனிதராக இருக்கின்றார்கள்.

வோல்ஃப் வால்தர் (WOLF Walther) ஜெர்மன் இஸ்லாம் கான்ஃபரன்ஸ் அமைப்பின் செயலாளர் ஆவார்கள். அன்னார் கூறினார்கள்:

நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள், ஜாமிஆவின் கட்டடம் மற்றும் கலீஃபா அவர்களின் உரை ஆகியவற்றால் நான் மிகுந்த தாக்கத்திற்குள்ளாகி விட்டேன்.

அன்னார் பின்னர் மூன்று மாணவர்களிடமும் உரையாடினார்கள். உள்ளூர் மேயரும், முக்கியமான ஜெர்மன் விருந்தினர்களும் அழைக்கப்பட்டதும், மகிழ்ச்சிக்குரிய இந்த சந்தர்ப்பத்தில் அவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டதும் அன்னாருக்கு மிகவும் பிடித்தமானதாக இருந்தது.

அன்னார் கூறினார்கள்: கலீஃபா அவர்களின் வழிகாட்டல்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததும், அவசியமானவையும் ஆகும். ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மாணவர்களுக்கு வழங்கிய ஒரு முக்கியமான வழிகாட்டல் குறித்து கருத்து தெரிவித்தவாறு அன்னார் இவ்வாறு கூறினார்கள்:

மாணவர்கள் இங்கு பொது மக்களிடமிருந்து வேறுபட்டவர்களாக தென்படுவார்கள்; மேலும் அவர்களின் உடை தனித்துவம் வாய்ந்ததாக இருக்கும் ; எனவே அவர்கள் நட்பு ரீதியிலான நடத்தையை மேற்கொள்ள வேண்டும் ; மேலும் திறந்த மனதுடன் மக்களை சந்திப்பவர்களாக இருக்க வேண்டும். இதனால் அச்சத்தைப் போக்குவதற்கும், காழ்ப்புணர்ச்சியிலிருந்து தப்பிப்பதற்கும் சந்தர்ப்பம் கிடைக்கின்றது. ஒருவர் மற்றவருடன் உரையாடுவது மற்றும் தகவல்களை பரிமாறிக் கொள்வது ஆகியவற்றின் மூலம் மட்டுமே அது சாத்தியமாகும். எனவே இது தொடர்பான கலீஃபா அவர்களின் வழிகாட்டல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். நான் கலீஃபா அவர்களின் நற்பண்புகளாலும் தாக்கத்திற்கு ஆளாகியுள்ளேன்.

அமெரிக்கன் கவுன்ஸில் ஜெனரல் கேவின் மீலாஸ் (Kevin Milas) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: நான் கலீஃபாவின் சந்திப்பின் காரணமாகவும் அன்னாரது உரையின் மூலமாகவும் மிகவும் தாக்கத்திற்குள்ளாகியுள்ளேன். அன்னாரை சந்தித்தது எனக்கு மிகவும் கண்ணியத்திற்குரிய விஷயமாகும்.

ஒரு பத்திரிகையாளர் ஹானாக் (Hanack) இவ்வாறு கூறினார்கள்: எனது கருத்தின்படி நிகழ்ச்சி கண்ணியம் மிகுந்த ஒன்றாக இருந்தது. மேலும் நட்புரீதியிலான சூழலில் நிகழ்ந்தது. உங்களுடைய உலகளாவியத் தலைவரின் சொற்பொழிவு என்னைப் பொருத்த வரை மிகவும் செறிவு மிக்கதாகவும், பயனுள்ளதாகவும் இருந்தது. அன்னாருடைய வாழ்வளிக்கும் சொற்கள் அடிப்படை நல்லொழுக்கங்களை மட்டுமே உள்ளடக்கியதாக இருக்கவில்லை.மாறாக, என் மீது ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தி விட்டன. ஏனெனில், சிறப்பான வழிமுறையில் உள்ளூர் வாசிகளுடன் நடந்து கொள்ளும்படி அன்னார் மாணவர்களிடம் குறிப்பிட்டார்கள்.

அச்சு மற்றும் எலக்ட்ரானிக் ஊடகங்களின் கவரேஜ்

ஜாமிஆ அஹ்மதிய்யாவின் திறப்பு விழாவை அச்சு மற்றும் எலக்ட்ரானிக் ஊடகங்கள் முழுமையாக கவரேஜ் வழங்கின. கீழ்கண்ட டிவி சேனல்கள், ரேடியோ சேனல்கள் மற்றும் செய்தித்தாள்கள் திறப்பு விழா நிகழ்ச்சியின் செய்திகளை வெளியிட்டன.

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com


GRIZZLY
BE ALWAYS AHEAD
Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com
my grizzly india
my grizzly india
my grizzly india

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 9 THU 05 DECEMBER 2024 Issue No 49

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

T.V Channels

1. Hr-fernsehen 2. RTL- Hessen 3. ZDF 4. Sat.1

Radio:

1. Deutsche Radio 2.Deutshe Welle

Newspapers:

1. Nh 24 2. Die Tageszeitung 3. Die Welt 4. Kipa (catholic international press) 5. Frankfurter Neue Presse 6. Giebener Allgemeine 7. BILd 8. Grob - Gerauer Echo 9. Ried Echo 10. Riedinformation 11. Junge Freiheit 12. Jung urdu 13. The nation London 14. Nibelungen Kurier 15. roznama express 16. Nachrichten 168, 17. German Missions in the US 18. Press relese from state of Hessen

செய்தித்தாள்கள் ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுடைய நிழற்படத்தையும், ஜாமிஆ அஹ்மதிய்யாவின் நிழற்படங்களையும் இரண்டு பக்கங்களில் வெளியிட்டன. மேலும் அந்த செய்தித்தாள்கள் இவ்வாறு எழுதின:

கலீஃபா ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் அவர்கள் மாணவர்களிடம் உரை நிகழ்த்தினார்கள். இஸ்லாத்தின் அழகு உலகிற்கு முன்னால் எடுத்து வைக்கப்பட வேண்டும் என்று அன்னார் மீண்டும், மீண்டும் கூறினார்கள். மேலும் அன்னார் அந்த இளைஞர்களுக்கு இவ்வாறு அறிவுரை வழங்கினார்கள். அதாவது நீங்கள் உங்களை நீங்களே ஆய்வு செய்ய வேண்டும்; போதனைகளை நீங்கள் மேற்கொள்ள வேண்டும் ;மேலும் மனிதகுலத்துடன் நல்லொழுக்கத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்று அன்னார் மாணவர்களுக்கு அறிவுரை வழங்கினார்கள். சமூகத்தில் மத நல்லிணக்கத்தையும், அமைதியையும் பரப்ப வேண்டும் என்பது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் முக்கிய நிபந்தனைகளில் ஒன்றாகும்.

அன்னார் பின்னர் ஒரு பத்திரிகையாளரின் கேள்விக்கு பதில் வழங்கியவாறு ஆங்கிலத்தில் இவ்வாறு கூறினார்கள்:

We belive in one God, in one Holy book and respect all religions.

அன்னாரின் உரை உருது மொழியில் நிகழ்த்தப்பட்டிருந்தது. அது ஜெர்மன் விருந்தினர்களுக்காக ஜெர்மனியில் உடனடி மொழியாக்கம் செய்யப்பட்டது.

Frankfurter Algemeine Zeitung என்ற பத்திரிகை செப்டம்பர் 18, 2012 தேதி தனது இதழில் கீழ்கண்ட செய்தியை வெளியிட்டது:

**ரைட்ஷெட் நகரத்தில் இமாம்களுக்கான மதரஸா திறப்பு**

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் எதிர்காலத்தில் ரைட்ஷெட் நகரத்தில் கிர்வஸ் கீராவ் தாலுகாவில் தனது ஜமாஅத்திற்காக இமாம்களை தயார்படுத்தும். கடந்த நாளன்று, ஜமாஅத்தின் அறிக்கையின்படி, ஜெர்மனியில் இமாம்களை உருவாக்கக் கூடிய ஜாமிஆ திறக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டிடம் ரைட்ஷெட்டில் தொழில் பகுதியில் Alten Grenzstein என்ற இடத்தில் திருக்குர்ஆன் திலாவத்துடன் திறக்கப்பட்டு விட்டது. இந்தக் கட்டிடம் ஜமாஅத் உறுப்பினர்களின் சந்தாக்களின் முதலீட்டின் மூலமாக தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்தக் கட்டிடம் ரைட்ஷெட்டின் மஸ்ஜிதுடன் இணைந்திருக்கின்றது. இதனை அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் மட்டுமே பயன்படுத்துகின்றது. இங்கு ஏழு வருட காலங்களில நூற்றி இருபது மாணவர்களுக்கு மார்க்க அறிஞராக ஆகுவதற்கு பயிற்சி வழங்கப்பட முடியும். அஹ்மதிய்யா ஜமாஅத் இந்த நோக்கத்திற்காக 4 மில்லியன் யூரோக்களை செலவிட்டுள்ளது. கல்விக் கூடக் கட்டடம் மட்டுமின்றி, இதில் ஒரு அசெம்பளி ஹாலும், ஒரு நூலகமும் உள்ளது. மேலும் இது தவிர, ஹாஸ்டலும் உள்ளது. அதில் மாணவர்கள் கல்வி நாட்களில் தங்கியிருக்கின்றனர். மதரஸாவில் தற்போது 80 மாணவர்களும், 12 ஆசிரியர்களும் இருக்கின்றனர்.

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஆன்மிகத் தலைவர் கலீஃபா மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் ஸாஹிப் அவர்கள் தமது சொற்பொழிவில் மாணவர்களுக்கு இதன் பக்கம் கவனமூட்டினார்கள் : அதாவது ரைட்ஷெட் மற்றும் மேஸன் நகரத்திலும் மக்களுடன் நல்ல தொடர்புகளை ஏற்படுத்துங்கள். அப்போதுதான் எல்லா வகையான சாத்தியமான தவறான எண்ணங்களையும் அகற்ற முடியும். நாங்கள் ஒன்றும் தாலிபான்கள் கிடையாது. இஸ்லாம் மற்ற மார்க்கம் மற்றும் பண்பாட்டு மக்களுடன் மோதல் போக்கில் ஈடுபடவில்லை. அஹ்மதிய்யத் ஒரு காழ்ப்புணர்ச்சியற்ற மற்றும் அமைதி நிறைந்த இஸ்லாத்தின் போதனையை வழங்குகின்றது.

இங்கு கல்வி பயில சேரும் மாணவர்களின் வயது 16 முதல் 20 ஆண்டுகள் வரை ஆகும். அஹ்மதிய்யா ஜமாஅத்தைப் பொருத்த வரை இவர்களில் பெரும்பான்மையினர் ஜெர்மனியில் வளர்ந்து பெரியவர்களாகி உள்ளனர். அதேநேரம் மற்ற ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் வந்துள்ளனர். ரைட்ஷெட்டில் 4,5 வகுப்புகளில் மாணவர்கள் திருக்குர்ஆன், அரபி மொழி, ஆங்கில மொழி, ஜெர்மன் மற்றும் பாகிஸ்தானின் அலுவல் மொழியும், அன்றாட மொழியுமான உருது மொழி போன்றவற்றை கற்கின்றனர். பாடத்திட்டத்தில் மார்க்கங்களின் ஒப்பீடு மற்றும் ஜெர்மனியின் வரலாறும் இருக்கின்றது. இஸ்லாத்தின் ஒரு நடுநிலையான பிரிவான அஹ்மதிய்யா ஜமாஅத்தின் துவக்கம் இந்தியாவில் நிகழ்ந்தது. ஜெர்மனியில் வசிக்கக் கூடிய 30 ஆயிரம் அஹ்மதிகளில் பாதி எண்ணிக்கை ஹேஸன் மாநிலத்தில் வசிக்கின்றது.

FRANKFURTER Rundschau என்ற பத்திரிகை தனது டிசம்பர் 18,2012 தேதி இதழில் இவ்வாறு எழுதியது:

பயங்கரவாதத்திற்கு எதிரான தற்காப்பு நடவடிக்கை

நூலகத்தை பார்வையிட்டபோது, இந்த விஷயம் வெளிப்படுகின்றது. அதாவது இந்த இடத்தில் மார்க்கக் கல்வி என்பதன் பொருள் மார்க்கத்தின் வட்டத்திற்கு வெளியே பார்வையை செலுத்துவது ஆகும். அலமாரிகளில் திருக்குர்ஆனுடன் பைபுளும் இடம் பெற்றிருக்கின்றது. இஸ்லாமிய நூல்களுடன் ஜெர்மன் வரலாற்றை உள்ளடக்கிய நூல்களின் பல்வேறு பாகங்களும் அலமாரிகளில் இடம் பெற்றுள்ளன. மேலும் போலூஸுடைய வாழ்க்கை வரலாறு மட்டுமின்றி ஆங்கிலம் மற்றும் அரேபிய அகராதிகளும் இடம் பெற்றுள்ளன. லண்டனை தவிர்த்து ஐரோப்பாவில் நிறுவப்பட்டுள்ள தனித்த மார்க்க கல்வி நிறுவனம் இதுவே ஆகும்.

**(தொடரும்..........)**

(நன்றி: அல்ஃபஸ்ல் பத்திரிகை , மார்ச் 01, 2013)

தமிழாக்கம்

A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * *

**National Watch Company**

**Sales & Service**



**B. Mohamed Adil**

93632 06679
99433 38000

196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM 99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT 99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad